உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி–௪௰.] சித்திரபானு-ஷு கார்த்திகைமீ [பகுதி–௧.

Vol. 40. November—December 1942. No. I.

### தில்லிமாநகர்த்

## திருவமர்மார்பன் திருக்கோயிற் காட்சி

[சுவாமி விபுலாநந்தரவர்கள்]

தொன்மைவளஞ்சான்ற மகதநாடு, புத்ததேவர்காலத்துக்கு முன்னாகவே நாகரிகம் படைத்த நாடாக விளங்கியது. புத்தர் காலத்திலும் அதற்குப் பின்னும் அமைந்த அழகிய கட்டிடங்கள் பல அழிவுற்றநிலையிலே இந்நாட்டினில் இன்றும் காணப்படுகின்றன. இந்நாட்டுமன்னன் கொடுத்த ஓலக்கமண்டபம் பழைய புகார்நகரத்தினை அழகுசெய்ததெனச் சிலப்பதிகாரநூல்வாயிலாக அறிகின்றாம்.

'இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரண வாயிலும்
பொன்னினும் மணியினும் புனைந்தன வாயினும்
நுண்வினைக் கம்மியர் காணா மரபின
துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோ ருதவிக்கு
மயன்விதித்துக் கொடுத்த மரபின விவைதாம்
ஒருங்குடன் புணர்ந்தாங் குயர்ந்தோ ரேத்தும்
அரும்பெறன் மரபின் மண்டபம்'

*

என இந்திரவிழவூரெடுத்தகாதை கூறும். குறித்த மூன்றுநாட்டு மன்னராலும் அனுப்பப்பட்ட நுண்வினைக்கம்மியர் வச்சிரநாட்டு முத்துப்பந்தர்போல்வதோர் முத்துப்பந்தரையும் மகதநாட்டு ஓலக்கமண்டபம்போல்வதோர் ஓலக்கமண்டபத்தையும் அவந்தி நாட்டுத் தோரணவாயில்போல்வதோர் தோரணவாயிலையும் ஒருங் கமைத்து அரும்பெறன்மண்டபமாக்கினரெனக்கொள்வதில் இழுக் கில்லை.

மகதநாட்டுப் பழைய சிற்பநலத்தினை ஆராய்ந்து நூலியற்றிய வங்கநாட்டறிஞராகிய ஸ்ரீஷ் சந்திர சட்டர்ஜி என்னும் சிற்பநூற் புலவர், தாம் மனக்கண்ணினாற் கண்டு துய்த்த அழகினைப் பிறர் புறக்கண்ணினாற் கண்டு துய்த்தல்வேண்டுமென்னும் எண்ண மானது உள்ளமீதூரத் தென்னாட்டிலும் குணகடற்கப்பாலுள்ள தீவுகளிலும் அமைந்த கோயில்களையும் பார்வையிட்டு மகதநாட்டுச் சிற்பநலம்வாய்ந்த அழகிய கோயிலொன்றினைப் பழைய இந்திரப் பிரஸ்தமாய் இந்நாளிலும் பாரதநாட்டின் தலைநகராய் விளங்கும் புதிய தில்லியிலே அமைத்தற்கு விரும்பினார்.

பெருங்குடிவாணிகராகிய பிர்லா என்னும் புகழாளர் சிற்ப நூற்புலவர்கருத்தோ டொன்றிய கருத்தினராய்க் கோயிலமைத் தற்குவேண்டிய பெரும்பொருளை வழங்கினார். பழைய மகதக் கம்மியரின்வழிவந்தோரும், வங்கநாட்டினின்றும் பிறநாட்டினின் றும் வந்த கம்மியரும் ஒருங்குகூடித் தூய வெள்ளிய சலவைக் கல்லினாலே புலவர்கருத்திற்கியைய அழகிய கோயிலைக் கட்டி முடித்தார்கள். லக்ஷ்மீநாராயணமந்திர் என வடநாட்டார்வழங்கும் இத்திருக்கோயிலின் நடுவி லமைந்தது திருமகளாரும் திருவமர் மார்பனும் வைகும் ஆலயம். அதற்கு வலப்புறத்தது உலகமாதா ஜகத்தாத்திரி என்னும் மூர்த்தமாக வைகும் ஆலயம்; இடப் புறத்தது சிவாலயம்: மூன்று ஆலயங்களுக்கும் இடையிலமைந்தன இரண்டு சதுக்கங்கள்; மேன்மாடத்திலும் இவ்வாறே.

முழுக்காட்டி அமுதூட்டும் வழிபாட்டுமுறையின்றி மலர் தூவி வழிபடுதற்கியைந்த இந்நியமத்திலே எப்பாலாருஞ் சென்று வழிபடலாம். இதனை உலகுபுகழ்ந்தேத்தும் காந்தியடிகள் திறந்து வைத்தார்கள்.

# திருவமர்மார்பன் திருக்கோயிற் காட்சி



மூன்றாண்டுகளின்முன் புதியடில்லிக்குப் போயிருந்தபொழுது இத்திருக்கோயிலைச் சென்று தரிசித்தேன். கோயிலினமைப்பும் ஓவியங்களின் வனப்பும் பழைய புகார்நகரத்தினை நினைவுறுத்தினவாதலின் அவைதம்மைத் தமிழ்ப்பாடலிலமைத்துக் கூறப்புகுந்தேன். அறிஞர் ஏற்று அருள்புரிவாராக.

தண்ணிலவின் கதிர்க்கற்றை தனைத்திரட்டி யுருவாக்கி
உண்ணிலவும் அமிழ்தத்தை உகுத்ததென, மணிவண்ணன்
கண்ணிலவு துயில்புரியும் கருதரிய திருமனையாம்
பண்ணிலவு பாற்கடலே பாரின்மிசைப் படர்ந்ததென,

வெண்மையும் பொலிவும் விழைதகு வனப்பும்
ஒண்மையும் மரீஇ, உரவோர் மனமெனக்
களங்கமற் றோங்கி, விளங்குமிந் நியமம்
பொன்னி னாழி பொருந்திய குடுமி
வெள்ளிக் குன்றென வெண்ணிறச் சலவைக்
கல்லிற் சமைந்த கவினுடைத் தம்ம!
சீரியல் நாரணன் திருவொடும் பொலிந்த
பேரியற் கோயிலிஃது ஈரியன் மருங்கும்
உலகு தாங்கிய ஒருத்தி கோயிலும்
கலைமதி புனைந்த கண்ணுதல் கோயிலும்
மூவிலைச் சூலம் மேவிய குடுமிக்
குன்றிரண் டிருபால் நின்றதோற் றத்த.

திருவாயி லிருமருங்கும் செழுங்கரத்திற் றண்டேந்தி
ஒருவாத படிமங்கள் ஓரிரண்டு நின்ற; இவை

ஓரிரண்டும் எழின்முகத்தில் உவகையொடு நகையரும்பி
வாருமிவண் வாருமென வலிந்தழைக்கும் நீர்மையவே.

மெருகிட்ட சலவைக்கல் வீதியினை வலம்வந்தே,
உருகிட்ட மெழுகென்ன உளந்ததும்ப உட்புகுந்தேன்;

உளந்ததும்பப் புகுந்தாங்கே உலகுபுரந் திடுமொருவன்
வளந்ததும்புந் திருவோடு மன்னியதோற் றங்கண்டேன்.

ஆரணங் கணிந்தது அரத்தப் பூந்துகில்;
காரணன் உடீஇயது பீதக ஆடை.
இருவர் மார்பினும் இலங்கிய தாமம்
பன்னிற நன்மலர் பயின்று விளங்குவ.

இருவர் சிரத்திலும் அருமணி மகுடம்;
செம்மலர்ப் பதத்திற் சிலம்பும் கழலும்;
அம்மலர் நோக்கி அகங்குளிர்ந் தப்பால்,

வேங்கைவரிப் புறத்தியைந்து விறல்வாளும் படைக்கலமும்
தாங்கியநல் லெழிலுருவைத் தாயுருவ மெனக்கண்டேன்;

தாயுருவாய் உலகளிக்குந் தயவுணர்ந்து மனமாசு
தேயஅவள் சீறடியைச் சிந்தையினில் இருத்தியப்பால்,

கல்லாலின் புடையமர்ந்து கருத்தொன்றி யோகுசெய
வல்லான்நல் லருளாளன் மதிமிலைந்த முடிச்சென்னி,

மதிமிலைந்த முடியானை மனநெகிழ்ந்து வழுத்தியபின்
விதிபுனைந்த மணிவாயில் விளங்கியவீ ருருக்கண்டேன்.

ஆரழல் மாமகம் அழிதர அடர்த்த
வீரனும் விண்ணவர் வெந்துய ரகலச்
சூருரங் கிழித்த சுடரிலை நெடுவேல்
ஏரகத் தவனும் இருபால் இலங்கினர்;
கண்ணுதல் வாயிற் காவலர் இவர்க்கண்டு,
உலகு தாங்கிய ஒருத்தி கோயிலில்
நடம்பயில் வைரவர் யோகினி யெனுமிவர்
இடம்பெயர்ந் துறையும் இயல்புங் கண்டேன்;
நாரணன் கோயில் ஏர்புனை வாயிலில்
நாரத முனியும் பாரதிப் பெயர்கொள்
சொல்லின் மடந்தையும் நல்லியல் வீணை
ஏந்திய கரத்தினர் இலங்கக் கண்டேன்.

அப்பால், இருபெருஞ் சதுக்கம் இயைந்தன; அவற்றுள்,

வேத வியாதனும் இடப தேவனும்
சாங்கியக் கபிலனும் தன்வந் திரியும்
மன்னிய சதுக்கம் வலப்பா லதுவே.

வையந்தா னுய்யும்வகை மாமறையை வகுத்துரைத்த
ஐயன்றன் திருக்கரத்தில் அருஞ்சுவடி பொலிந்ததுவே;

அருஞ்சுவடிப் பொருள்தேரின் ஆரணநூன் முடிந்தவிடம்
பொருந்துபொருள் ஒன்றென்னப் புலங்கொள்ள உரைப்பதுவே;

சீரிடப தேவனெனுஞ் சினனுரைத்த வாசகந்தான்
ஓரினைந்து பெருநோன்பின் உண்மையினை உரைப்பதுவே;

உண்மைநிலை கொலைகளவி னொழிந்தநிலை கொடுங்காமம்
எண்ணுபொரு ளாசைநீக்கல் இவைசீலம் இயமமெனல்.

அறுநான்கு தத்துவமும் ஆய்ந்துரைக்குங் கபிலமுனி;
மறுநீங்க உடலோம்பு மரபினிற்றன் வந்திரியே,

மரபினில்ஜ யைந்தாண்டின் மணமகன்றான் எண்ணிரண்டு
விரவியவள் பாலின்பம் விழையுமெனும் உரைகூறும்.

இடப்பாற் சதுக்கத்து மழுப்படை ராமனும்
சீதை கேள்வனும் யாதவ ரிறையும்
அருளறம் பகர்ந்த பெருவிறற் புத்தனும்
தத்தம் உயர்மொழி தந்துநின் றனரே.

ஆங்கு, நெடுநிலை மாடத் தரமிய மேறிச்
சுவரி லெழுதிய சித்திரம் நோக்க
மாமனு வேந்தனும் ரகுவும் போசனும்
தாமவிக் கிரமனுந் தங்கின ரொருபால்;
கங்கையும் யமுனையும் கலந்தன ஒருபால்;
மாபா ரதத்தும் இராமன் கதையுளும்
மேவிய தொன்மை விரிந்தன ஒருபால்;
திருத்தகு ராம கிருட்டிண தேவனும்
சங்கரா சிரியனும் சார்ந்தன ரொருபால்;
சந்திர குப்தனும் அசோக மன்னனும்
சுந்தர உருவிற் றோன்றின ரொருபால்;
இங்கிப் பரிசின் இயைந்த ஓவிய
நலங்கண் டுவக்கும் நகர மாந்தர்
மாட்சியும் ஒருபெருங் காட்சி யாகும்:

முளையெயிற்றுச் செய்யவாய் முதிராத பசுங்குதலை
இளமகார் தமையேந்தும் இளநல்லார் குழுவொருபால்;

தண்டூன்றி நடுக்குறூஉம் தளர்நடையும் நரைமுடியும்
கொண்டேன்ற முதுமகளிர் குழுவொருபாற் குலவுமே.

அலர்கதிர் ஆழியும் அந்தண் மதியம்
நிகர்திருச் சங்கமும் நீள்கரத் தேந்தி
மலர்மக ளொருபால் மருவ மன்னிய
தாமரைக் கண்ணன் சேவடி
மேவிய தில்லி வியனகர் பெரிதே.

# மகாமகோபாத்தியாய டாக்டர்
# சாமிநாதையர்

[திருவல்லிக்கேணி ஹிந்து இளைஞர்சங்கத்தினர் டாக்டர். சாமிநாதையரவர்களுடைய திருவுருவப்படத்தையும், பாரதியாருடைய திருவுருவப்படத்தையும் தங்கள் சங்கத்தில் அமைத்த விழாவில் சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச்சித் துறைத்தலைவர் ராவ்ஸாஹிப் ஸ்ரீ. S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L. பேசியது.]

டாக்டர் சாமிநாதையரவர்கள் நம்மிடையேநின்று மறைந்து சில மாதங்களாயின. அவர்கள் குடும்பத்தினர் வடித்த கண்ணீர்த் துளிகள், அவர்கள் உறவுமுறையினர் சிலகாலம் அடைந்த அருந் துயரம், அவர்கள் நண்பர்களுடைய சிலகாலத் துக்கம், அவர்களைத் தெரிந்தவர்களின் மனத்துயரம், அங்கங்கே தமிழ்க்கழகங்களில் நிறைவேற்றப்பட்ட அநுதாபத் தீர்மானங்கள், பத்திரிகைகளிற் கறுப்புக்கோடுகளில் அடைத்த துக்கச்செய்தி: இவற்றோடு அவர்களைக்குறித்த ஞாபகம் மறைந்துவிடக்கூடியதா? அன்று. அவர்களுடைய திருவுருவப்படத்தை அங்கங்கே அமைத்துப் போற்றுதல்வேண்டும். இச்செயல் மிகவும் பாராட்டத்தக்கதே.

ஐயரவர்கள் பூர்விகத்தமிழிலக்கியத்தின் பிரதிநிதி. தற்காலத் தமிழிலக்கியத்தின் பிரதிநிதி பாரதியார். இவ்விருவரும் திருவல்லிக்கேணியோடு தொடர்புடையவர்கள். பாரதியார் சென்னை ராஜதானியின் தென்கோடியிலுள்ள திருநெல்வேலியைச் சார்ந்தவர்கள்; ஐயரவர்கள் இந்த ராஜதானியின் வடபகுதியிலுள்ளவர்கள். பாரதியார் தமிழன்னையின் உக்ரமூர்த்தமாகவுள்ளவர்; ஐயரவர்கள் அவ்வன்னையின் சாந்தமூர்த்தமாகவுள்ளவர்கள். பாரதியாரின் சொற்கள் தேசபக்தியும் தமிழ்ப்பற்றும் கொழுந்துவிட்டெரிந்து, கேட்போரின் மனத்திலே அளவற்ற பக்திக்கனலை அள்ளியெறிந்து, அம்மனத்தைப் பற்றியெரியச்செய்கின்றன; ஐயரவர்களின்சொற்கள்

ஆழ்ந்த தமிழறிவினால் பரிபக்குவமெய்திக் குளிர்ந்த நிலவொளியை வீசுகின்றன. பாரதியார் வாழ்க்கைப்போராட்டத்தில் துன்புற்று நைந்து வருந்தியவர்; ஐயரவர்கள் இவ்வகைப் போராட்டத்தால் துன்புறாதுவாழ்ந்தமை நமது பாக்கியமே. பாரதியார் பெருங் கவிஞர்; ஐயரவர்கள் பெரும்புலவர்: இவ்விருபெருந்தகைமையாள ரின் திருவுருவங்களும் நமது இளைஞர்கள் எப்பொழுதும் தியானித்து வரத்தக்கன. இவ்விருவரது வாழ்க்கைகளும் நம்நாட்டு இளைஞர் களுக்குப் பயன்படக்கூடிய பல உபதேசங்களைத் தரத்தக்கன.

ஐயரவர்கள் குறுந்தூறுநிரம்பிய குறுங்காட்டில் தனிநின்றோங்கிய பெருமரமல்லர். அவர்கள்காலத்தில்சிறந்த வித்துவான்கள் இருந்தார் கள். உதாரணமாக ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை, வி.கோ.சூரியநாராயணசாஸ்திரியார், ரா. இராகவையங்கார், பின்னத் தூர் நாராயணசாமிஐயர் முதலிய பெரும்புலவர்கள் செழித்தோங் கியகாலம் இவர்கள் காலமேயாகும். ஆராய்ச்சியிற் சிறந்த கனக சபைப்பிள்ளையவர்களும், ஆராய்ச்சியிலும்கவித்துவத்திலும்சிறந்து விளங்கிய ஆசிரியர் சுந்தரம்பிள்ளையவர்களும் இவர்கள்காலத் தினரேயாவர். இப்பெரும்புலவர்தொகுதிக்கு இப்போது பிரதிநிதி யாக வாழ்ந்திருப்பவர்கள் ரா. இராகவையங்காரவர்களே. இப் பெருமக்களிடையே வாழ்ந்து தமக்கெனவுரிய தனிப்பெருமையிற் சிறந்தோங்கியவர்கள் ஐயரவர்கள். இத்தனை பெரியோர்களுக்கிடை யிற் சிறந்துவாழ்வதென்றால் ஐயரவர்களுடைய தனிப்பெருமை எவ்வளவாகவுள்ளதென ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம்.

ஐயரவர்கள் 60 வருஷகாலமாகத் தமிழையே சிந்தித்துவந் தார்கள்; தமிழ்நூல்களையே ஓதிவந்தார்கள்; தமிழ்நூல்களையே போதித்துவந்தார்கள்; தமிழ்நூலாராய்ச்சியே செய்துவந்தார்கள்; தமிழ்நூல்களையே பதிப்பித்துவந்தார்கள்; தமிழ்நூல்களையே தேடிப் பெற்றுத் தொகுத்துவந்தார்கள்; அவர்கள் கிருகத்தைத் தமிழ்த்தெய்வத்தின் திருக்கோயில் என்றுதான் சொல்லவேண்டும்.

எத்தனை அரியநூல்களை அவர்கள் அழகுற-கல்வியாளர்கள் மெச்சும்படி, நல்லமுறையிற் பதிப்புத்தந்திருக்கிறார்கள். பத்துப் பாட்டு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல்,

புறநானூறு, ஐம்பெருங்காப்பியங்களிற் கிடைப்பன: இவையெல்லாம் ஐயரவர்கள் நமக்குத்தந்த தமிழ்க்கருவூலங்கள். பதிப்புப் பேராசிரியர் என்ற பெயர்க்கு இவர்களே தக்கவர்கள்.

இவர்கள் பதிப்புக்களால் தமிழன்னையின் நல்லணிகள் மாசு நீக்கப்பட்டு அவள் திருமேனியில் அணியப்பட்டன. தமிழரசர்கள் சரித்திரம், தமிழ்ப்புலவர்சரித்திரம், தமிழ்நாட்டுச்சரித்திரம்: இவைகளெல்லாவற்றிலும் பல அம்சங்கள் தெரியவந்தன. இவைகளை முற்றும் பரிசோதனைசெய்தால், தமிழுக்குரிய புராதனசரித்திரம் இன்னும் வெளிவருவதாயிருக்கும்.

இவர்கள் தேடித் தொகுத்துவைத்திருக்கும் அரியநூல்களைத் திருந்தியமுறையிற் பதிப்பிடுவதானல் சிறந்த தமிழறிஞர்களுக்குப் பல தலைமுறைக்காலம் உளங்கூர்ந்தவேலை இருந்துகொண்டேயிருக்கும். ஐயரவர்கள் முயற்சியெடுத்துத்தொகுத்துவையாமற்போனால், நமது பழந்தமிழ்க் கருவூலங்களிற் பலவற்றை நாம் இழந்துபோக நேரிட்டிருக்கும். நமது நல்வினைப்பயனாகத்தான் ஐயரவர்கள் தோன்றினர்கள்.

தமிழிலக்கியசரிதத்தின் காலப்பகுப்பில், ஐயரவர்கள் தொண்டுபுரிந்துவந்த 60 ஆண்டுகளையும் 'சாமிநாதையர்காலம்' என்றுதான் பிற்காலத்தில்வரும் தமிழ்ச்சரித ஆசிரியர்கள் கூறுவார்கள்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று'

ஸ்ரீ:

# அருளிச்செயற் பாடவமைதி

[ராவ்ஸாஹிப். வித்வான். ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள்.]

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் அருளிய திவ்யப்ரபந்தங்களுக்குப் பூர்வாசாரியர்கள் எழுதியுள்ள வியாக்யானங்கள் அருமைபெருமைவாய்ந்தவை. அப்பேருரைகள் இல்லையேல் தமிழ்வேதம் என்று போற்றப்படும் அருளிச்செயல்களின் உண்மைப்பொருள்களை நம்மனோர் உணர்ந்துகொள்ள இடமே இல்லை. அவற்றை நன்கறிந்து போற்றுவதால், திவ்யப்ரபந்தங்களை யாவரும் சுத்தமாகவே ஓதியுய்யலாகும். அவ்வாறு அறிந்தோதாக் குறைபால், பிறழ்ந்த பாடங்கள் பலவிடங்களில் அமையநேர்ந்தன. இவற்றையெல்லாம், செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவினரான ஸ்ரீ. உப. வே. அண்ணங்கராசாரிய ஸ்வாமியும் பிறரும் உரைநூல்களிலும் பத்திரிகைகளிலும் விளக்கிவருகிறார்கள்.

பழமையான நூல்களிலே பாடாந்தரங்கள் அமைதல் எம்மொழியிலும் உண்டு. பின்வந்த உரையாசிரியர்கள் அவற்றுள் ஏற்புடையவற்றைக் கொண்டு ஏலாதவற்றை விலக்கியுள்ளதை அறிஞர்கள் நன்கறிவர். அம்முறையில் அருளிச்செயல் வியாக்யாதாக்கள்காலத்திலும் பாடாந்தரங்களாக வழங்கியவை பலவுள. உதாரணமாக:—

திருவாய்மொழி முதற்பத்து 5-ஆம் திருப்பதிகத்திலே, முதலிரண்டுபாசுரங்களின் அந்தமும் ஆதியுமாகத் தங்கள்காலத்து வழங்கிய 'நினைந்துநைந்தே' 'நினைந்துநைந்து' என்ற பாடங்களோடு, 'இனைந்துநைந்தே' 'இனைந்துநைந்து' என்ற பக்ஷாந்தர பாடங்களையும் பன்னீராயிரப்படி குறிப்பிட்டிருத்தலும்,

திருமாலை 45-ஆம் பாசுரத்தில் 'கவளமால்யானை' என்ற பாடத்தோடு, 'களவமால்யானை' என்ற பக்ஷாந்தரபாடத்தையும் இருபத்துநாலாயிரப்படி குறித்திருத்தலும் காண்க.

இவற்றால், அத்யாபகர்களின் பாடபேதங்கள், வியாக்யான பாடங்கள், அவ்வியாக்யானங்களிற் கண்ட பக்ஷாந்தரபாடங்கள் என முக்கியமாக மூன்றுவகைப்பாடங்கள் இப்போது அறியப்படுகின்றன. வேறுவகையும் இருக்கலாம். இவற்றுள் எதனையும்பற்றி எழுத யான் முன்வரவில்லை. இவற்றின் வேறான நான்காம்வகை ஒன்றையே இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஆழ்வார்கள் திவ்யப்பிரபந்தங்கள் யாவும் தமிழநன்னூற்றுறைகள் ஐந்துக்கும் இலக்கியமாக விளங்குவன என்பதே முன்னோர்முடிபு. சொற்பொருள்மரபுகளாலும் வழக்குவரலாறுகளாலும் தமிழ்வரம்பை அவை சிறிதும் கடந்தனவல்ல. இவற்றிற் குறைபாடு காணப்படுமாயின், அங்கே ஏதோ திருத்தமேனும் பாடபேதமேனும் உண்டு என்றே சொல்லலாம். இதனை நன்குணர்ந்து, தமிழ்முன்னூல்களோடு ஒப்பிட்டுநோக்குவோமானால், அருளிச்செயல்களிலே பொருட்சிறப்புள்ள பழம்பாடங்கள் பல நமக்கு விளங்கக்கூடியன. பழைய சாஸனங்களும் இவ்வாராய்ச்சிக்கு ஓரளவு துணையாகும். திவ்யப்ரபந்த வியாக்யாதாக்களும் இம்முறையை அறிந்தவர்களே; ஆயினும், அவர்க்கும் முன்பிருந்தோர் பலரும் வழக்கமாய் ஓதிவந்த பாடங்களை மதித்துத் தழுவியும், அவற்றுக்கு அர்த்தரஸங்களையூட்டுவதில் அதிக நோக்கங்கொண்டும் அவர்கள் உரையிட்டார்கள். மேலேகாட்டிய திருவாய்மொழி திருமாலை வியாக்யானங்களின் பக்ஷாந்தரபாடங்களே இதற்குச் சான்றுகளாகும். அப்பாடங்கள், மோனை எதுகை நயங்களும் பொருளிற் குறைவில்லாமையும் உடையவாயினும், தலைமைப்பாடங்களாக அவற்றை வியாக்யாதாக்கள் கொள்ளாமைக்கு இதுவே காரணமாகவேண்டும். இவ்வாறு, முன்னோர் ஓதிவந்த பாடங்களைப் பொன்னேபோற் போற்றி அதற்கு உரையிட்டுவந்ததனால், ஏனைய பாடங்களின் ஆராய்ச்சியில் அவர்கள் அதிகமாக ஈடுபடவில்லை. எனினும், பழந்தமிழ்நூல்களும் சாஸனங்களும் பல்கிவரும் இக்காலத்தே சொற்சுவை பொருட்சுவைகளாலும், வழக்குவரலாறுகளாலும் சிறந்துகாணப்படும் பாடங்கள் ஆராய்ச்சிமுறையில் அறியப்படுமாயின், முன்னோர் பாடங்களுடன் மாறுபட்டன என்ற காரணத்தால் அவற்றை அடியோடு ஒதுக்கி

விடுதல் சிறிதும் உற்றதன்று. அதனால், அவ்வாராய்ச்சிமுறையில் நான் கண்டவற்றை இங்கெழுதுகின்றேன்; பேரறிஞர்கள் ஏற்புடையன கொள்க.

1. பெரியாழ்வார் திருமொழி முதற்பத்துள்:—

"வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்
கண்ணன் கேசவ நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ண மெதிரெதிர் தூவிடக்
கண்ணன் முற்றம் கலந்தள றாயிற்றே" (1)

"பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில்
காணத் தாம்புகு வார்புக்குப் போதுவார்" (3)

என்ற பாசுரங்களிலே 'நம்பி பிறந்தினில்', "பிள்ளை பிறந்தினில்' என்று வழங்கப்படுகின்றன. 'பிறந்தினில்' என்பதற்குப்—பிறந்த போது, பிறந்தவளவில் எனவும், 'பிறந்தவிதனில்' என்பதன் விகாரமாகவுமாம்' எனவும் அறிஞர்சிலர் பொருளுரைத்துள்ளார். வழங்கி வரும் பாடத்துக்கு இவ்வாறு சொல்முடிவும் பொருளும் கூறினும், இவை பெரிதும் அமைவுடையன என்பது அவர்கட்கும் கருத்தன்று. அதனால், ஏதோ பழைய சுத்தபாடம் இங்கு மாறியது என்றே தெரியலாம். அஃது, இச்சொல்லில் ஒரெழுத்தின் ஒரு மாத்திரையை நீட்டுவதால் எளிதில் அமைதல் குறிப்பிடத்தக்கது.

அஃதாவது:—

'நம்பி பிறந்தீனில்', 'பிள்ளை பிறந்தீனில்'

என்பதே. கண்ணன் அவதரித்த சூதிகாகிருகம் என்பது இங்கே பொருளாம். பிறந்த ஈனில்=பிறந்தீனில்; பிறந்தகம் என்பது போல. ஈன் இல் - பிரஸவவீடு. பிறந்தபிள்ளையைக் காணப் புகுவதற்கும், புக்குப்போதுதற்கும் பிரஸவவீடு என்ற பொருளே மிகவும் ஏற்றதாதல் அறியத்தக்கது. ஈனில் இப்பொருளில் வழங்குதலை,

"சேவல், சூன்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்" (குறுந்தொகை. 85)

"சினைமுதிர் பேடைச் செவ்வி நோக்கி
ஈனில் இழைக்க வேண்டி" (பதினெ. திருவாரூர். 19)

"சேவலன்னம்......ஈனில் இழைத்துப் பாதுகாக்கின்றாற்போல"
(திருக்கோ. 369 உரை.)

என்ற முன்னோர்கூற்றுக்களால் அறிக. பிறந்த இன் இல் (=அவ தரித்த இனிய வீடு) எனப் பிரித்துப் பொருள்கண்ட பெரியாரும் உளர். அவர்க்கு, பிறந்த ஈன் இல் என்ற இப் பிரிப்பும் பொருளும் பெரிதும் ஏற்புடையவாகத் தடையில்லை.

2. அத்திருமொழி நான்காம்பத்து 'மாவடியை' என்ற பதிகத்தின் முதற்பாசுரத்தில்—

"திருவடிதன் திருவுருவுந் திருமங்கை மலர்க்கண்ணுங் காட்டிநின்ற
உருவுடைய மலர்நீலங் காற்றாட்ட வோசலிக்கு மொளியரங்கமே"

எனவரும் அடிகளில் 'ஓசலிக்கும்' என்பது வழங்குகிற பாடம். இதற்கு 'நீலம் காற்றாட்டுதலால் அசையப்பெற்ற' என்றும், "ஓ-வியப்பு; அசையுமாம்" என்றும் பொருளும் குறிப்பும் தரப்பட்டுள்ளன. ஓதப்படும் பாடத்துக்கு ஏற்றபடி, இப்பொருள் அமைந்துளது என்றே சொல்லவேண்டும்.

எனினும், ஓசனித்தல் என்ற வினைச்சொல் ஒன்று பழைமையாகவே தமிழில் உண்டு. இதற்குத் தலையெடுப்பாதல், இடம் விட்டுப் பெயரமுயலுதல், சிறகடித்தல் என்ற பொருள்கள் கூறப்பட்டுள்ளன.

"வேனில் வேந்தன் வேற்றுப்புலம் படர
ஓசனிக் கின்ற வுறுவெயிற் கடைநாள்" (சிலப். 10, 124-5)

"உடைதிரை முத்தஞ் சிந்த ஓசனிக்கின்ற அன்னம்" (சீவக. 2652)

என்ற முன்னூற்றொடர்களின் பழைய உரைகளை நோக்குக. ஆகவே, காற்று ஆட்டுதலால் நீலமலர்கள் தலையெடுத்துநிமிரும், (அன்றி) இடம்விட்டுப் பெயரமுயலும் என்ற பொருளில் 'நீலம் காற்றாட்ட ஓசனிக்கும்' என்று ஆதியில் அமைந்திருந்த தொடரே, பின்பு ஓசலிக்கும் என்று எழுத்துமாற்றம் அடைந்ததாக வேண்டும். ஒருசொல்லாய்ப் பொருளாலும் குறைவற்றுநிற்கும் இப்பாடமே, இருசொற்களாக்கி ஒன்றை இடைச்சொல்லாகக் கொள்ளும் பாடத்தினும் சீரியது என்னத் தட்டில்லை.

3. ஷை மூன்றாம்பத்து 7-ம் திருமொழி 'நாடுமூரும் அறியவே போய்' என்ற 5-ஆம் பாசுரத்தில்,

"கேசவனோ டிவளைப், பாடுகாவலிடுமின் என்று பார்தடு மாறினதே"

என்பது முன்னோர்பாடம். இதற்கு—'கேசவனோடு இவளைப் (பாடு-) பக்கத்தில் காவலில்வையுங்கள்' என்று பொருள்கூறப்பட்டுள்ளது.

ஆனால் இங்கே கொள்ளத்தகுந்த பழம்பாடம் 'பாடிகாவலிடுமின்' என்பதாம். பாடிகாவல்-சிறைக்காவல், ஊர்த்தலையாரிகளின் காவல்.

"பாடிகாவலிற் பட்டுக்கழிதிரே"

"பாடிகாவலிற் பட்டுக்கழியுமே" (தேவா)

"ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு"

(சிவஞானபோதம். 2 அதி)

என்ற முன்னூல்வழக்கும் காண்க. இச்சிறைகாவலர், தலையாரிகளைப் பாடிகாப்பார் என்பர்:

"ஒன்று கெட்டவாறே பாடிகாப்பாரைப் பிடிக்குமாபோலே' (ஈடு. 10-1-4)

"பாடிகாப்பாரே களவுகாணுமாபோலே" (பெரியதிரு. வியாக். 8—5—1)

சாஸனங்களிலும் இச்சொல்வழக்கு மிகுதியும் பயிலும், (I. M. P. pp. 190, 1634, 1655). 'கேசவனோடு இவளைக் காவலிடுமின்' என்பதே, கேசவன்பக்கத்தில் என்ற பொருள் பயப்பதாம். அதனால் 'பாடிகாவல்' என்பதே பழம்பாடமாதல்வேண்டும்.

4. ஷை, 4-ஆம் பத்து, 5-ஆம் திருமொழி, "சோர்வினாற் பொருள்" என்ற பாசுரத்தில்—

"ஆர்வமென்பதோர் பூவிடவல்லார்க்கு அரவதண்டத்தி னுய்யலுமாமே"

என்ற அடியிலே, அரவதண்டம் என்பதை அறவதண்டம் என்று கொள்ளத்தகும். அறவன்-தருமனாகிய யமன். தருமபுத்திரனை 'அறவோன்மகனே' என்பர் முன்னோர் (புறம்). அறவதண்டம்-யமதண்டனை. "தண்டமுடைத்தருமன்" என்பர் (தேவா).

அப்பாசுரத்தில் 'ஆர்வினவிலும்' என்பது ஓசை குன்றுதலால், 'ஆர்வினாவிலும்' என்ற பாடமே கொள்ளத்தகும்.

5. ஷை, 9-ஆம் திருமொழி 4-ஆம் பாசுரத்தே—

"பதினாறு மாயிரவர் தேவிமார் பணிசெய்யத் துவரை யென்னும்
அதில்நாய கர்ஆகி வீற்றிருந்த மணவாளர் மன்னு கோயில்"

என்ற அடிகளில் 'துவரையென்னும் அதில்'' என்று பிரித்துக் கொண்டு அதற்கேற்பப் பொருளும் கூறப்படுகின்றது. ஆனால் மோனைநயமும் பொருட்சிறப்பும் கொண்ட பழம்பாடம் 'துவரையென்னும் மதில்நாயகர்' என்பதாகவே கொள்ளத்தகும். இத்தொடர்க்கு 'துவாரகையென்ற மதிலரணுள்ள நகரத்துக்கு அரசர்' என்பது பொருளாம். திரிபுரங்களை, 'எயிற்குலமூன்று' (திருக்கோவை. 36) என்று கூறும் வழக்கும் ஒப்பிடுக. அம்மூ வெயிலையும்—"இரும்புறுமாமதில் பொன்னிஞ்சி வெள்ளிப்புரிசை" என்றுவாதவூரடிகள் பாடியதற்கு(திருக்கோவை. 167)-பேராசிரியர் "இரும்பு பொன் வெள்ளிகள் பொருந்திய மதில்களையுடைய ஊரும் (திரிபுரம்)'' என்று பொருள்கூறியிருத்தலும் காண்க. மதிலரண்கள்கொண்ட மூன்றூர்களையுடைய பாண்டியனை 'மும்மதில்வேந்தன்' என்ப (இறை. களவியலுரை. பாட். 252). துவரையைக் கூறுந்தோறும் அதனை மதிற்பெருமையால் விசேடித்துக் கூறுவர் முன்னோர்:

"செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசைத் துவரை"
"துன்னரு நீண்மதிற் றுவராபதிக்கிறை" (பெருங்கதை)

எனக் காண்க. "வடதடமும் வைகுந்தமும் மதிற்றுவராபதியும்" என்று இவ்வாழ்வாரே அருளிச்செய்தலும் குறிப்பிடத்தக்கது.

இப்பாட்டின் 3-ஆம் அடியில் 'புதுநாள் மலர்க்கமலம்' என்றுள்ளதை, 'புதுநாளமலர்க்கமலம்' என்று கொள்வது சிறக்கும். 'நாள்மலர்' என்பதாயின், நாள் என்பதே புதுமை குறிக்கும்; அதனால், புதியதும் தண்டையுடையதுமான கமலமலர் என்ற பொருளில் 'புதுநாளமலர்க்கமலம்' என்ற பாடம் ஏற்புடையதே. நாளம்-தண்டு (கம்பரா. மிதிலைக். 75). 'தாளதாமரை' என்ப (திருவாய்).

6. திருப்பாவை, 4-ஆம் பாசுரத்தில்,

"ஆழிமழைக்கண்ணா வொன்றுநீ கைகரவேல்"

என்பது, இப்போது வழங்கும்பாடம். மழைக்கண்ணு என்பதற்கு 'வர்ஷத்துக்கு நிர்வாஹகனே!' என்று பொருளும், "அவயவங்களுள் கண் பிரதானமாயிருப்பதுபோல, பர்ஜன்யன் மழைக்குப் பிரதானன் என்பதுபற்றிக் 'கண்ணு' என்கிறது" என்று குறிப்பும் வியாக்யானங்களிற் காணப்படுகின்றன. கண்ணன் என்ற சொல் நிர்வாஹகன் என்ற பொருளில் நேரே வழங்குவதன்று என்பது, மேற்கூறிய குறிப்பாலே பெறப்படும். குறிப்பிற்பெறும் பொருளிலும், ஒரு சிறு வளைவுக்கீற்றால் நேர்பொருள் அமையுமாயின், அப்பாடம் சிறந்ததாகுமன்றோ? அஃதாவது—

"ஆழிமழைக் கண்ணு லொன்றுநீ கைகரவேல்"

என்பதாம். மழைக்கு அண்ணல்-மழைக்கு ஸ்வாமியே, நிர்வாஹகனே! என்றவாறு. லகர வகரங்கள் ஏட்டெழுத்துக்களில் மாறுபட்டு வழங்குவதற்கு எத்தனையோ உதாரணங்கள் காட்டலாம். "நலங்களாய நற்கலைகள் நாவிலும் நவின்றிலேன்" (திருச்சந்த. 90) என்று, வியாக்யானத்துக்கேற்ப அமைந்துள்ள பாடத்துக்கு, லகர வகரங்களின் எழுத்தொற்றுமையால், 'நாலிலும் நவின்றிலேன்' என்று பாடாந்தரம் வழங்குதல் காண்க. 'மக்கட்கிறை' 'வேந்தர்க்கொளி' என்பனபோல 'மழைக்கண்ணல்' என வந்தது.

7. ஷை, 16-வது 'நாயகனாய்நின்ற என்ற பாசுரத்தில்—

"தூயோமாய் வந்தோம் துயிலெழபாடுவான்"

என்பது இப்போது ஓதும் பாடம். இங்கு ஒற்றுமிகவேண்டுதலால், 'துயிலெழப்பாடுவான்' என்று பதிப்பிட்டாரும், கலியோசை நயங்குன்றுவதுகண்டு, 'துயிலெழல்பாடுவான்' என்று பாடங் கூறுவாரும் உளர். ஆனால், இவற்றில் எதுவும் பழம்பாடம் ஆகாது. துயில்கொள்ளும் அரசரை வந்திகள் இன்னிசைபாடித் துயிலுணர்த்துதல் மரபு. இது 'துயிலெடைநிலை' என்ற புறத்துறையாகும். "சூதர் ஏத்திய துயிலெடைநிலையும்" என்பர் தொல்காப்பியனார் (பொருளதி. 91).

"பயில்பூம் பள்ளித் துயிலெடை மாக்கள்
இசைகொ ளோசையின் இன்றுயி லேற்று"

என்பது பெருங்கதை (4-6-81). துயில் எடை-உறக்கத்தினின்று எடுப்புதல். எடுப்புதலெனினும் எழுப்புதலெனினும் ஒக்கும். இவ்வொப்புமைபற்றியே, 'துயிலெடைபாடுவான்' என்றிருந்த பழம்பாடம், 'துயிலெழுபாடுவான்' என டகர ழகாரங்களோடு அபேதமாய்ப் பாடம் மாறியதென்றே கொள்ளத்தகும்.

8. நாய்ச்சியார்திருமொழி, 2-ம் பதிகம், 7-ம் பாசுரத்தில்,

"ஓதமாகடல்வண்ணாவுன் மணவாட்டிமாரொடுசூழறும்
* * * எங்கள் சிற்றில் சிதையேலே"

என்ற அடிகளுள் 'சூழறும்' என்பது வியாக்யானபாடம். "உன் மணவாட்டிமாரொடு சூழறும்-உனக்கு நல்லாரொடு சூழறுங்கிடாய், இத்தை அழிப்பாயாகில்;" 'சூழறுகை - ஆணையிடுகை' என்பன வியாக்யானபங்திகள். இவ்வாறு, ஆணைப்பொருளதாயின், இது 'சூளறும்' என்றிருத்தல்வேண்டும். சூள் அறுதல்-ஆணையறுதியிடுதல். வஞ்சினத்தைச் 'சூளறவு' என்பர் (திருக்கோவை 187). ஆணைப் பொருளில் இச்சொல் வழங்குதலை, சுந்தரமூர்த்திநாயனாரது திருப்புனவாயில் தேவாரப்பதிகம் முழுதும் - 'மனமே! என்னோடு சூளறும்' என்றாற் போலும் தொடர்கள் பயிலுதலால் நன்கறியலாம்.

இனி, "மணவாட்டிமாரொடு சூளூறும்" என்ற பாடமும் வழங்குகின்றது. இச்சூளூறும் என்பதற்கும் ஆணையிடல் என்பதே பொருளாம். சிந்தாமணியில்—சீவகனது பவனியைக் காணவேண்டி, விரைந்துசெல்லும் அவனது ஊர்தியான பிடியை நிற்குமாறு கூறும் பெண்டிர்கூற்றில்—

"சிறுபிடி! கேள்வன் அயிராவணத்தொடு சூளூறும்" (2126)

என்று இவ்வாணைச்சொல் வழங்குதல் இங்கே ஒப்பிடத்தக்கது. இதற்கு—நச்சினார்க்கினியர், "சிறுபிடி! நின்கேள்வனாகிய அயிராவணத்தோடு சூளூறுவேம்" என்று பொருளும், "சூளூறும் என்பது 'சேறும்' என்றாற்போலப் பன்மையுரைக்கும் தன்மைச் சொல்" என்று குறிப்பும் எழுதுகின்றார். இப்பொருளுங் குறிப்பும் ஆண்டாள் திருவாக்குக்கும் பெரிதும் ஏற்பனவே. ஆனால், முற்கூறிய தேவாரத்தொடரான 'சூளறும்' என்பது முன்னிலை

யொருமையினும் வழங்குதல் காணலாம். இதனல் சூளறும், சூளுறும் என்ற இருவகையும் ஒருபொருளில் வழங்குவதே என்பதும், 'சூழறும்' என்ற பாடம் திருத்தத்தக்கது என்பதும் அறியலாம்.

9. யாப்பருங்கலவிருத்தி என்ற செய்யுளிலக்கணநூலுரையுள், பொய்கையாழ்வார் அருளிய முதற்றிருவந்தாதியில் உள்ள

"எளிதிலிரண்டடியும்" (51) "பாலன்றனதுருவாய்" (69)

என்ற பாசுரங்க ளிரண்டு, இறுதி, முற்றுகரமாய்முடிந்த வெண்பாக்களுக்கு உதாகரிக்கப்பட்டு, 'பொய்கையார்வாக்கு' என்ற குறிப்பும் தரப்பட்டுள்ளன. இவற்றுள் முதற்பாட்டு—

"எளிதி லிரண்டடியுங் காண்பதற்கென் னுள்ளம்
தெளியத் தெளிந்தொழியுஞ் செவ்வே—களியிற்
பொருந்தா தவனைப் பொரலுற் றரியா
யிருந்தான் திருநாம மெண்"

என்று முற்றுகரவீருகவின்றியே இப்போது பாடம் வழங்குகின்றது. இஃதன்றி, இப்பாட்டு, அவ்விருத்தியுரையுள்,

"எளிதி னிரண்டடியுங் காண்பதற்கென் னெஞ்சே
தெளிதிற் றெளிந்துரைப்பன் செவ்வே—அளிகள்
பொருந்தா ரிரணியனைப் பொரலுற் றரியாய்
இருந்தான் திருநாம மெண்ணு"

என்று பாடபேதம் பலகொண்டு உள்ளது. 'பாலன்றனதுருவாய்' என்ற பொய்கையார் பாசுரம் முற்றுகாவீருக இப்போதும் ஓதப்படுவதாம். அதனில் 'ஆலிலையின் மேலன்று நீ கிடந்தாய்', 'வேலை சூழ்நீரதோ' என்பன தவிர, மற்றவை ஒற்றுமைகொண்டுள்ளன. இப்பாசுரங்களை உதாகரித்த யாப்பருங்கலவிருத்திகாரர் 11-ஆம் நூற்றூண்டினராகத் தெரிகின்றூர். இதனுல், மணிப்பிரவாள வியாக்யானங்கள் அதிகமாக நடையாடாதகாலத்தே இப்போது ஓதுமுறையினும் வேறுகவழங்கிய பாடங்கள் அருளிச்செயல்கட்கு அமைந்திருந்தன என்பது தெரியலாம். இப் பழம்பாடங்களிலும் நயமுடையன கொள்ளத்தகும்.

10. இயற்பாவில், பூதத்தாழ்வார் அருளிய இரண்டாந்திருவந்தாதி, 53-ஆம் பாசுரம், பின்வருமாறு:—

"நெறியார் குழற்கற்றை முன்னின்று பின்தாழ்ந்
தறியா திளங்கிரியென் றெண்ணிப்—பிறியாது
பூங்கொடிகள் வைகும் பொருபுனற் குன்றென்னும்
வேங்கடமே யாம்விரும்பும் வெற்பு"

"வழியிடையே அசையாது இருந்துகொண்டு தியானிக்கும் ஆசிருதர்களுடைய, முன்புறத்திலிருந்து பின்புறமாகத் தாழ்ந்துள்ள கூந்தற்றொகுதியை, அறியாதே சிறுமலையென்று எண்ணி, பூக்களையுடைய கொடிகள் தங்குகிற...பொரும்புனலையுடைய குன்றான திருவேங்கடமே நாம் விரும்பும் மலை" என்ற கருத்தில் இப்பாடற்குப் பழைய வியாக்யானம் அமைந்துளது. இங்கு, 'நெறியார்' என்பதற்கு 'ஸ்தாவரப் பிரதிஷ்டராயிருந்து தியானிக்கிறவர்கள்' என்றும், 'குழற்கற்றை' என்பதற்குக் 'கூந்தற்றொகுதி' என்றும் பொருள்கொள்ளப்பட்டமை தெரியலாம். இதனால் தம் காலத்தில் முன்னோர் ஓதிவந்த பாடத்துக்கு அமைந்ததொரு பொருளை வியாக்யாதாக்கள் விளக்கியுள்ளார்கள் என்றே கொள்ள வேண்டும்.

ஆயினும், குழற்றொகுதியை இளங்கிரி என்று எண்ணிப் பூங்கொடிகள் அதன்மேற் படர்ந்து தங்குவன என்ற கருத்தில், அக்குழற்கும் கிரிக்கும் ஒப்புமை நன்கு அமையாததோடு, இளங்கிரி என்ற இளமைவிசேடணம் ஏற்புடையதாகவும் தோன்றவில்லை. அதனால், பழையபாடம் வேறாயிருந்து பின்பு மாறியதாகவே தோற்றுகின்றது. அப்பாடம்,

"நெறியார் குழக்களிற்றை முன்னின்று பின்தாழ்ந்
தறியா திளங்கிரியென் றெண்ணிப்—பிறியாது
பூங்கொடிகள் வைகும் பொருபுனற் குன்றென்னும்
வேங்கடமே யாம்விரும்பும் வெற்பு"

என்றிருந்ததாதல் வேண்டும். இதன்படி நோக்குமிடத்து, 'முன்புறம் உயர்ந்தும் பின்புறம் தாழ்ந்தும் வழியிடையே தங்கிக்

கிடக்கும் இளங்களிற்றியானையை, அறியாமல் சிறிய குன்று என்று நெருங்கிப் பூங்கொடிகள் அதன்மேலே தங்கும்........... வேங்கடம்' என்பது பொருளாகும். இளங்கிரி என்று கருதற்குக் குழக்களிறு ஏற்றதாதலும், அதனைத் திரண்டுயர்ந்த பாறையான துறுகல் என்று நெருங்கிப் பூங்கொடிகள்படர்தல் இயற்கையாதலும் காண்க. இதுவே, பொருட்பொருத்தமுள்ள பழம்பாடமாதல் வேண்டும் என்பது சங்கநூலான குறுந்தொகையுள் (36)

"துறுகல் அயலது மாணை மாக்கொடி*
துஞ்சுகளி றிவரும் குன்ற நாடன்"

என்னும் சான்றோர்கூற்றாற் பெறப்படும். ஈண்டு, 'மாணைமாக் கொடி' என்பதனோடு (திருவந்தாதியிலே) 'பூங்கொடி' என்பதும், 'துஞ்சுகளிறு' என்பதனோடு 'நெறியார் குழக்களிறு' என்பதும், 'அயலது மாணைமாக்கொடி இவரும்' என்பதனோடு, 'பூங் கொடிகள் வைகும்' என்பதும் பெரிதும் ஒப்புமைபெற்றிருத்தல் நோக்கத்தக்கது. துறுகல், யானைபோலத் தோன்றும் என்பர்.

"மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெய லுழந்த இரும்பிணர்த் துறுகல்" (குறுந். 13)

"புகர்முக வேழம், இரும்பிணர்த் துறுகற்
†பிடிசெத்துத் தழூஉம்" (ஐங்குறு. 239)

இவற்றால், குழக்களிற்றை என்பது 'குழற்கற்றை' என்றும், மோனைக்கியைய அண்ணிப் பிறியாது என்றிருக்கவேண்டியது 'எண்ணிப் பிரியாது' என்றும் மாறின என்பது தெரியலாம். குழக்களிறு - இளங்களிறு. 'குழக்கன்று' என்பதுபோல (மூன்றாந்திரு. 71; நீலகேசி. 402). 'குலக்களிற்றை' என்பது குழக்கற்றை எனத்

---

* 'துறுகற்பக்கத்துள்ள மாணை என்ற பெருங்கொடியானது அங்கே கிடந்துறங்கும் களிற்றின்மேல் வேற்றுமைதெரியாது படரும் குன்றஞ் சூழ்ந்த நாடன்' என்பது இதன்பொருள். மூங்கில்களைப் பிணைத்துத் தெப்பம் கட்டுவதற்கு உறுதியானது இம்மாணைக்கொடி என்பது கம்பர்வாக்கால் தெரிகின்றது (இராமா. வனம்புகு. 36).

† பிடிசெத்து - பிடிபாகக்கருதி.

திரிந்ததெனினும் பொருந்தும். எட்டெழுத்துக்களில் லகரழகர வேறுபாடில்லாமல் இருத்தலும், அவ்விடங்களில் பொருட் பொருத்தம் பெறச் சில எழுத்துக்களைக் கூட்டியும் குறைத்தும் வழங்குதலும் முன்னூல்களிலும் காணலாம். உதாரணமாக— திவாகரம் பிங்கலந்தை நிகண்டுகளில் 'வராகக்கொடி வேள்புலவர சர்க்கு (சளுக்கரசர்க்கு) உரியது' என்ற பொருளில் அமைந்த 'கேழல் வேள்புலவரசர் கொடியே' என்ற சூத்திரப்பாவைக்,

"கேழல்வேழம்புலவர் கொடியே"

என்று படித்துக்கொண்டு, அதற்கேற்ப, பன்றியும், யானையும் புலவர்கொடி என்ற பொருளிற் பாடிவிட்ட பின்னோரும் உண்டு. †

[தொடரும்]

---

௨

## செந்தமிழ்நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

உலகத்தையலைத்துவரும் பெரும்போரின்விளைவான காகிதப் பஞ்சத்தாலும் அளவுக்குமிஞ்சிய காகிதவிலையேற்றத்தாலும் நம் செந்தமிழை, இதுவரை வெளியிட்டுவந்த அளவிற் சில பக்கங்கள் குறைத்து, 40-ஆம் தொகுதியின் முதற்பகுதியாகிய நாளிது சித்திரபானு-ஸூ கார்த்திகைமாதப்பகுதிதொடங்கி மாதந் தோறும் 40 பக்க அளவில்(5 பாரமாக)வெளியிடநேர்ந்திருப்பதைச் செந்தமிழ்நேயர்கள் பொறுத்து, அதை வழக்கப்படி ஆதரித்துவர வேண்டிக்கொள்ளப்பெறுகிறார்கள்.

பத்திராசிரியர்.

---

† ஆராய்ச்சித்தொகுதி பக். 477-8 பக்கம் காண்க.

# பண்டைத் தமிழர்

[நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசரவர்கள்]

## I. ஒரு புதியகோள்கை

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

தமிழர் எனும் சொல் இக்காலம் தமிழ்மொழியைப் பயிலுவோரைமட்டிற் குறிக்கும். இங்கே நாம் இப்பெயரீட்டினுள் இதனை ஒத்ததாகிய திராவிடர் எனும் சொல் சுட்டுகின்ற கன்னடர், தெலுங்கர், மலையாளிகள், துளுவர், தொடுவர், குடகர், குறாக்கர் ஆகிய குலங்களாய் ஆறுகோடிக்குமேற்பட்டவராய் உள்ள அனைவரையும் அடக்கிப் பேசுகின்றோம். உள்ளபடி "தமிழர்" "திராவிடர்" எனும் இருசொற்களும் ஒருசொல்லின் இரு உருவபேதங்களே என்பர் ஆராய்ச்சிநிரம்பினோர். இவருள் "தமிழர்" திராவிடர் எனத் திரிந்தது என முடிப்பர் ஒருசாரார். திராவிடர் எனும் சொல்லே தமிழர் என்றாயிற்று எனக் கூறுவர் மற்றொருசாரார்.

இவ்வாதத்தை ஒருவாறு தீர்க்கும்பொருட்டுப் பாதகண்டத்துக்குவெளியே தமிழருக்குப் பண்டைநாளில் இடப்பட்ட பெயரை நோக்குவோமாயின், 'திரமிலர்' என்ற பெயரும் நம் தமிழருடைய பழக்கவழக்கங்களும் உள்ள ஒருகுலத்தார், தற்காலம் கிரேக்கர் வசிக்கின்ற பாகங்களிலே இருந்தனராக, கிரேக்கசரித்திர ஆசிரியர்களின் பிதா எனப் போற்றப்படுகின்ற எறோடோத்துஸ் என்பவருடைய நூலால் அறிகின்றோம். எறொடோத்துஸ் கி. மு. ஐந்தாம்நூற்றாண்டில் வாழ்ந்தவர். பழங்கால வரலாறுகளை ஆராய்ந்து தமது நூலில் எழுதிவைத்தவர். அவர் கிரேக்கதேசத்திலுள்ள லீசியா எனும் பிரிவின் பண்டைக்குடிகளைப்பற்றிச் சொல்லுமிடத்து: லீசியர் முன்னாளில் தெர்மிலே! (தெர்மிலர்) என்ற பெயர் உடையோராய் இருந்தனரெனவும், தம் காலத்தில் அன்னோர் தங்களை லீசியர் என்று சொல்லிக்கொண்டபோதிலும் பிறர் அவர்களைத் தெர்மிலர் என்றே அழைத்துவந்தனரெனவும் கூறுகின்றார்.

இன்னும் அவர் கூற்றுப்படி, இத்தெர்மிலர் முன் கிறேத்தா எனும் தீவில் வசித்தவர்கள்; அத்தீவில் இருந்தோரெல்லாம் இவர்களைப்போன்ற மிலேச்சர்களே; அங்கு மீனொஸ் சர்பேடொன் எனும் இருவர் சகோதரர்களுக்கிடையில் அரசுரிமையைப்பற்றிப் போர் மூண்டபோது, மீனொஸ் சர்பேடொனை வென்றதினால் இச் சர்பேடொனும் இவனைச் சார்ந்து போராடிய தெர்மிலரும் அங்கிருந்து வெளியேறி, பின் மீலியஸ் என்று அழைக்கப்பட்ட நாட்டில் வந்து குடியேறினர்; மீலியஸ்நாடே பின் லீசியாவாயிற்று. தெர்மிலரே லீசியராயினர்; இவர்களுடைய பழக்க வழக்கங்களுள் ஒன்று வேறு எந்தச் சாதி சனங்களுள்ளும் காணப்படாதது; அது யாதெனில், இவர்கள் தங்கள் வழிமுறையைத் தந்தையில் நின்றன்று, தாயில் நின்று எடுத்துச்சொல்லுகின்றவர்கள்; ஒருவனிடம் அவன் குலவழியைக் கேட்டால், தகப்பனின் வமிசாவளியை அல்ல, தாய்வமிசாவளியையே எடுத்துக்கூறுவான்; ஒருகுலமகள் அடிமைமகனை விவாகஞ் செய்துகொள்ளின் இருவர்க்கும் பிறந்தபிள்ளை மேற்குலத்ததாக எண்ணப்படும்; அடிமை குலமகளை மணந்தாலோ சந்ததி அடிமையாக மதிக்கப்படும் என்கின்றார்.[1]

தமிழருள் இன்றைக்கும் பெண் தலையிடம் பெற்றிருத்தலைக் காணலாம். பிளினி எனும் உரோமநூலாசிரியர் பாண்டியர்களுள் (Pandai) மட்டும் பெண்கள் அரசாளும்வழக்கம் இருந்ததெனக் கூறியதும்[2] இங்கு நோக்கத்தக்கது. இன்றைக்கும் மலையாளத்தில் பெண்களுக்கே ஆண்களிலும் கூடிய உரிமைகள் உள. அதன் ஒரு பாகத்தில் மருமக்கட்டாயம் வழங்கியதால் அது நாரீசேரம் எனப் பெயர் அடைந்ததையும் நோக்குக.[3] யாழ்ப்பாணத்தில் முக்காற் பங்குநிலம் பெண்களுடையது. பெண்ணரசு தமிழகத்தில் விளங்கிய காலங்களும் உள. பெற்றோரைக் குறிக்குமிடத்து, தந்தை தாய் என்றன்றித் தாய் தந்தை, அன்னையும் பிதாவும் எனக் கூறும் வழக்கத்தையும் காண்க. கடவுளை ஆதித்தமிழர் பெண்ணுருவாகச்சொல்லியதும் ஒன்று. ஆகவே, தெர்மிலர் பெண்வழியைப் போற்றிய வழக்கம் இக்காலத் தமிழருடையதை ஒத்திருக்கக் காணலாம். கிறேத்தாதீவைத் தெர்மிலருடைய வாசத்தானமாகப்

---

[1] Herodotus, 1 : 173. [2] Pliny, 6; 20 : 76 [3] தமிழ்வரலாறு, 186.

பழைய சரித்திராசிரியர் காட்டியதற்கு இணங்க, அத்தீவின் பழைய பெயரும் த்ரிமிலி என்றிருந்ததையும், லீசியர் தங்கள் பிரேதக்குழிக் கல்வெட்டுக்களில் தங்களுக்குத் திரிமிலி என்றே பெயர்பொறித்துவந்ததையும் நோக்குக. அத்தீவின் பழைய நாகரிகமும் தமிழ்நாகரிகமும் ஒன்று என்பது இன்றைக்கு நன்ருய் நிலைநாட்டப்பட்ட ஒரு உண்மை. இதனைச் சுட்டிய குறிப்புக்களை மேல்வரும் அதிகாரங்களுள் காண்க. அதனால் அத்தீவின் பழங்குடிகளாகிய தெர்மிலர் தமிழரே என்பது வலியுறுவதாகும்.

கல்லியா (Gallia) எனும் பிராஞ்சிலும், பிரித்தானியா (Britannia) எனும் இங்கிலாந்திலும் முற்காலம் இருந்த துருயிதர் (Druids) எனும் சாதியார் பிந்திவந்த பிராஞ்சிய ஆங்கில சாதிகளின் வேருனவர்கள் என்பது சரித்திரசம்மதம். இந்தத் துருயிதரைக் கயெலிக் எனும் ஆதி ஐரிஷ்மொழியில் திறஓஇட் (Dravidh) என்பர். இவர்கள் பிற்காலம் சமயஆசாரியர்களாகவும் மாயவித்தைக்காரராகவும் கணிக்கப்பட்டபோதிலும், எல்லோரும் அத்தொழிலுடையவர்களல்லர். ஆதிக்குடிகளான பொது ஜனங்கள் சகலருமே துருயிதர் எனப்பட்டனர். இவர்களுள், சமயஆசாரியத் தொழிலை நிகழ்த்தியவர்களைப்பற்றிய வரலாறுகள்மட்டும் உரோம சரித்திராசிரியர்களால் அக்காலம் வரைந்துவைக்கப்பட்டன. இச் சரித்திராசிரியர்களிலிருந்து நாம் அறிகின்ற துருயிதர் கல்லியாவிலும் பிரித்தானியாவிலும் பின் வந்து குடியேறியோர்கள் அறியாத தத்துவசாத்திரக்கொள்கைகள் உள்ளவர்கள்; வானசாத்திரவுணர்ச்சியில் மேம்பட்டவர்கள்; மறுபிறப்பு உண்டென்றவர்கள்; தங்கள் சீடருக்கு உவமைகளால் போதித்தவர்கள்; மத்தியதரைக் கடலை அடுத்த நிலத்துவாழ்ந்த பழைய இருண்டநிறமுள்ள சனங்களின் தெய்வங்களையே தொழுதவர்கள்; மாத்தோப்புக்களில் தங்கள் சமயக்கிரியைகளை நடத்திவந்தவர்கள்; மரவழிபாடும் உள்ளவர்கள். இவ்விவரங்களாலும் திறஓஇட் எனும் அவர்கள் ஆதிப்பெயராலும் இவர்கள் திராவிடர் எனும் தெர்மிலர்வகுப்பைச் சேர்ந்தவர்களே எனத் தோன்றுகின்றது. இவர்கள்பெயர் திரசிடர் (Drasidae), தசிடர் (Dacidae) என ஓர்பால் மருவிவந்தது

எனவும், இஸ்பானியாதேசத்துத் திரகனர் (Draganes) என்பவர்களும் இவர்கள்வகுப்பைச் சேர்ந்தவர்களே எனவும் பாதர் ஹிறஸ் கூறுவர்.

தமிழர் பரதகண்டத்திலேயும் முற்காலத்தில் 'திரமிளர்' என அழைக்கப்பட்டமையை இனி நோக்குவோம். தமிழ்நூலாசிரியர்களுள் முதன்முதல் இதற்குச் சாட்சியானவர் இன்றைக்கு முந்நூறு வருஷங்களின்முன் "பிரயோகவிவேகம்" எனும் நூலை இயற்றிய சுப்பிரமணியதீக்ஷிதர். இவர் 'த்ரமிள' எனும் வடமொழிப்பெயர் தான் 'தமிழ்' எனச் சிதைந்துவந்தது எனச் செப்பினர். இப்பெயர் வடமொழிநூல்களுள் 'திரவிடம், திராவிடம்' எனச் சிறிது திரித்துவழங்கப்பட்டதைக் கிறிஸ்துவுக்குமுன் உள்ள மனுஸ்மிருதியிலும், பிற்பட்ட வடமொழிப்புராணங்களிலும் காண்கின்றேம். சிலஇடங்களில் தென்னுட்டார் அனைவரையும் பொதுவாய்க் குறித்த இப்பெயரீடு தமிழருக்கே சிறப்பாய்ப் பொருந்துவது என்றதைக் கி. பி. 7 அல்லது 8-ஆம் நூற்றுண்டைச்சேர்ந்த குமாரிலபட்டர் 'ஆந்த்ர த்ராவிடபாஷா' என்று வகுத்துக்கூறியதனுல் விளங்கவைத்தார். ஆந்திரம் என்றது தெலுங்கு. கன்னடத்தை இவர் தெலுங்கோடு சேர்த்தார்போலும். அக்காலம் மலையாளம் தமிழிலிருந்து முற்றுகப் பிரிபடாதுநின்றமையால் அது தமிழுள் அடங்கும். உள்ளபடி தமிழர், கன்னடர், தெலுங்கர், மலையாளர் எல்லாம் ஆதித்திரமிளருள் அடங்கியவர்களே. பிற்காலம்மட்டும் தமிழர் எனச் சிறப்பித்துக் கூறப்பட்ட தென்னுட்டாருக்குத் 'திரமிளர்' எனும் பெயர் வேறு கூறப்பட்டது. இவர்களுடைய மொழி தான் 'திரமிளம்' எனச் சிறப்புப்பெயர் அடைந்தது. தமிழ் வடநாட்டாரால் திராவிடம் என வழங்கப்பட்டதற்குக் குமாரிலபட்டர் கூற்று ஒரு நற்சான்று.

'திரமிலர்' எனும் பெயர் தென்னுட்டில் 'தமிழர்' என மருவி வழங்க, வடமொழிநாடகங்களிலும் சமணர்நூல்களிலும் அது 'தவிட, தமிள' என மாறுவதாயிற்று. ஆயினும், கி. பி. ஆறும் நூற்றுண்டிலேதான் வராகமிகிரரின் நூலின் பழங் கையெழுத்துப்

பிரதிகளில் 'த்ரமிட' எனும் உருவம் காணப்பட்டது. அந்நூற்ருண்டிலேயே மங்கலேசஅரசன்சாசனங்களில் 'திரமில' என்று வருகின்றது. தென்னிந்தியத் தமிழரை அறிந்த கிரேக்க ஆசிரியர்கள் தங்கள் நூல்களில் 'தமிழர்' என்ற பிற்கால உருவத்தைத்தான் வெவ்வேறுவகையாய்த் திரித்து எழுதினர். பெரிப்புளுஸ் எனும் (கி. மு. 4-ஆம் நூற்ருண்டு) நூல் அவர்களைத் 'தமேராய்' (Tamirai) என்றும், அவர்கள்நாட்டை 'லிமுரிகே' (Limyrike) என்றும் வழங்குகின்றது. 'லிமுரிகே' தமிழகம்போலும். இப்பெயர்தான் தோலேமியின் (கி. பி. 2-ஆம் நூற்ருண்டு) நூலில் லுமிரிகே (Lymirike) என்றும், கி. மு. மூன்ரும்நூற்ருண்டின் பெயுத்துங்கெர் அட்டவணையில் (Peutingerian Table) ஸ்கூத்திய—துமிரிசே (Scythia Dymirice) என்றும் வருகின்றது. 'திரமிளம்'தான் 'தமிழ்' என மாறிற்றென்பதைத் திராவிடப்பிரகாசிகைநூலுடையாரான, யாழ்ப்பாணத்துச் சபாபதிநாவலர், மறுத்துரைத்து முதன்மையுடைய இம்மொழிக்குப் பிறபாஷைச்சொல்லாற் பெயரீடு உண்டாயிருத்தல் பொருந்தாது என முடித்தார். இவரதுகொள்கையே தற்காலத்துப்பண்டிதர் பலருடையதுமாம். நாமும் பெருவழக்காயிருந்த இக்கொள்கையைத் தழுவித் 'திராவிடம் எனும் ஸம்ஸ்கிருதச்சொல் தமிழ் எனும் சொல்லினின்றே மருவிப் பிறந்திருத்தல்வேண்டும். அன்றி, திராவிடமே தமிழ் எனத் திரிந்தது எனல் எவ்வாற்ருனும் ஒவ்வாது' எனப் பல ஆண்டுகளின்முன் எமது "தமிழரின் பூர்வசரித்திரமும் சமயமும்" எனும் நூலில் வரைந்திருந்தோம். இப்பெயரீடு பிறபாஷைச் சொல்லன்று, தமிழ்ச்சொல்லே என்பது விளக்கப்படும். ஆராய்ச்சி நிரம்பிவருகின்ற இக்காலத்திற் பழையகொள்கைகள் மாறவேண்டி வருதலில் இழுக்கொன்றும் இல்லை.

'தமிழர்' 'தமிழ்' எனுஞ் சொற்களின் பண்டைநிலையை நோக்காதோரெல்லாம் அச்சொற்கட்குப் பலவாருய்ப் பொருத்தமற்ற உற்பத்திகளைக் கற்பிப்பர். 'தமிழ்' என்பது 'தம்உள்',

அதாவது ஒருகூட்டத்தார் தமக்குட் பேசிய மொழியாம், என்பர் ஒருசாரார். 'தமிழ்' எனும் சொல் 'இனிமை' எனும் பொருளில் பிற்காலநூல்களுள் வழங்கியிருக்கின்றமையால், இனிமையான ஒரு மொழியைப் பேசியவரே தமிழர் என்பர் ஒருசாரார். 'சூரியன்' எனப் பொருள்படுகின்ற 'தாமம்' எனுஞ்சொல்லே 'தமிழ்' என மருவிவந்ததென்பர் ஒருசாரார். சூரியன்பெயர் இம்மொழிக்கு உண்டானமை எவ்வாறென அன்னோரை வினவுங்கால், அனுமான் சூரியனிடத்து இலக்கணங்கற்றமையாலும் கலைமகள் கீழ்த்திசையைநோக்கி வீற்றிருக்கின்றமையாலும் சூரியனே வித்தியாபதி என்பர். சிலர் தமிழ் எனுஞ்சொல்லை 'த், அ, ம், இ, ழ்' என ஐந்து உறுப்புக்களாகப் பிரித்துப் பஞ்சாட்சரத்தையுடையதாகிய சைவசித்தாந்தத்தைக் கூறும் மொழியே என்பர். ஸ்ரீ. சி. வை. தாமோதரம்பிள்ளை 'தமி' என்றது 'தனித்தது;' 'தனக்கு இணையில்லாதது' எனும் அடியாற் பிறந்து, 'இமிழ்' 'உமிழ்' முதலிய சொற்களிற்போல 'ழ்' விகுதிபெற்றுவந்ததே 'தமிழ்' என முடித்தார். 'தமிரலிற்றி' எனும் இந்திய வடகீழ்த்திசைப் பட்டினப் பெயர்தான் 'தமிழ்' என வந்தது என்றார், "1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்" எனும் நூலாசிரியரான ஸ்ரீ கனகசபைப் பிள்ளை. போப்பையர் எனும் பண்டிதர் வடநாட்டாருடைய பாஷை 'வடமொழி' எனப்பட்டதுபோல, தென்னாட்டாருடையது 'தென்மொழி' எனப்பட்டுத் 'தெம்மொழி', 'தெமிழ்', 'தமிழ்' என மருவியிருக்கலாம் என ஊகித்தார்.

இவையெல்லாம் சரித்திர ஆராய்ச்சியோடும் மொழி ஆராய்ச்சியோடும் ஒட்டாமல் ஊகமாத்திரையாய்ச் சொல்லிய உற்பத்திகளே. "தமி", "தனி", தனக்கிணையில்லாதது எனத் தமிழ்ப் பெயர் வந்ததாயின், அதன் இலக்கண இலக்கியங்களை நன்கு ஆராய்ந்து பிறமொழியிலக்கண இலக்கியங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தபின்பே அப்பெயர் வரலாம்; ஆதலால் அது பொருந்தாது. இவ்வாறே 'தமிழ்' என்ற சொல்லுக்கு இனிமை என்றபொருள்

பின்வந்ததேயன்றி 'இனிமையானது எது; அது தமிழ்' எனக் கூற அமையாது. அது 'திரமிலர்' என்பதிலிருந்து மருவிவந்த இயற்சொல்லாயன்றி, இனிமையென்ற கருத்துள்ள யாதோர் அடியினின்றும் பிறந்ததாகத் தோன்றவில்லை. தமிழ்மொழி செவிக்கினிமையானது எனப்பட்டமையால், 'தமிழ்' எனுஞ் சொல்லும் இனிமைப்பொருள்பெற்றதுபோலும்! 'தென்மொழி' என்றபெயர் வடமொழியோடுவைத்து ஒப்பிட்டபின்னே எழத்தக்கது. இவ்வாறே அவரவர் மதிநுட்பத்தாற் கற்பித்த உற்பத்தியெல்லாம் பிழைபட்டுப்போகப் பண்டைக்காலத்தில் இருந்த திரமிலர் என்போர் தமது இருப்பிடத்தின் இயற்கையை ஒட்டிப் பூண்டுகொண்ட பெயர் தமிழர் என வந்து, அன்னோர் பயின்றமொழிக்கும் பெயராயிற்று என்பதே பொருத்தமாகின்றது.

இவ்வாறாயின், 'தெர்மிலர்' அல்லது 'திரமிலர்' எனும் சொல்லின் பொருள் யாது? பழஞ்சொல் ஆராய்ச்சியாளர் கருதுகின்றபடி 'திர' என்பது தற்காலத் 'திரை' அல்லது 'கடல்' ஆகும். மலையாளத்தில் இச்சொல் சிறிது வேறுபட்ட பொருளோடு 'திர' என்றே காணப்படுகின்றது. 'இல்' என்பது குடி. இருசொற்களுக்கும் இடைநின்ற மகரம் இக்காலத்து வகரத்தை ஒத்த பழையகாளின் உடம்படுமெய் என்ப. இன்றைக்கும் 'என்னவோ' (என்ன + வ் + ஓ) என்பது 'என்னமோ' ('என்ன + ம் + ஓ') என்றும் நிற்பதைக் காண்க. பிற்காலத்தமிழில் வகர உடம்படுமெய்யோடு நகர அல்லது ஞகர உடம்படுமெய்யும் காணப்படுகின்றது: உதாரணம், உழுநன், கிளைஞன். ஆயின், நகர ஞகரங்கள் வகரமாய் மாறுதல் எளிதிற் பெறப்படாது; மகரமே வகரமாகத்திரிதல் இயல்பு; மறுபால், மகரம் நகரமாய்த் திரிதலும் எளிது. ஆதலால் மகரந்தான் ஆதி உடம்படுமெய்யாய்நின்று, ஒருபால் நகர ஞகரங்களாயும், மறுபால் வகரமாயும் மருவிற்று எனலாம். இவ்வாறே ஆதியில் 'திர + இல் + அர் என்பது 'திரமிலர்' என்றாயிற்று. இதனையே கிரேக்கர் 'தெர்மில் + ஏ' அதாவது, 'தெர்மிலர்' எனத் திரித்து

உச்சரித்தார். 'கடலில், அல்லது கடற்கரையிற் குடிகொண்டவர்' என்பது இதன் கருத்து.

தமிழர் ஆதியிலே கடல்மேல் வலிபடைத்தோராய் இருந்தனர் என்றமை பல ஏதுக்களாலும் பெறப்படும். இதனாலேதான் போலும் அவர்களுள் பிற்காலத்திலும் பரவர், திரையர், திமிலர், மீனர் எனும் முக்கிய பிரிவார் இருக்கக் காண்கின்றோம். பரவர் பரவையின்மீது செல்லுவோர். இவர்கள் சிந்துவெளியில் மிக்கிருந்தமை அவ்விடத்துக் கண்டெடுத்த சித்திரலிபிச்சாசனங்கள் காட்டும் என்ப. 'திரையர்' எனுஞ்சொல் 'திரமிலர்' என்பதைப்போலத் திர எனும் அடியாய்ப் பிறந்து, நெய்தல்நிலத்தலைவரைக் குறிப்பது. திமிலரும் நெய்தல்நிலமக்களே. 'திமில்' என்பது கட்டுமரம், மீன்படகு. இது கடற்றொழிலாளரையே குறிக்கும். பாண்டியன் மீன்கொடியுயர்த்தியதும் அவன் மீனவர்தலைவன் என்றமையினாற் போலும். கிறேத்தாதீவின் மீனொஸ் எனுந் தலைவனையும் இங்கு நினைக்கத்தகும். அவன்பெயர் மீனவன்போலும். அத்தீவில் கடலோடு சம்பந்தம்பூண்டிருந்த சாதியார் திரமிலர் என்று வழங்கப்பட்டமை மிகப்பொருத்தமுள்ளதே ஆகின்றது. தமிழர் பண்டு தொட்டுக் கடற்செலவிற் சிறந்தவர்கள் என்பதற்கு அன்றுடைய மொழியில் 'கடல், பரவை, புணரி, ஆர்கலி, முந்நீர்' எனச் சமுத்திரத்தையும், கலம், தோணி, மிதவை, கப்பல்' என மரக்கலத்தையும் குறிக்கும் பழந்தமிழ்ச்சொற்கள் இருத்தலும் சான்று.

'திரமிலர்' எனும் சொல்லுற்பத்தி இவ்வாறுயிருக்க வடமொழியில் அதற்கு வேறொரு பொருள்கொள்ளலானது எப்படி? பின்னாளில் வடஇந்தியாவில் வந்திறங்கிய ஆரியர் தம்மோடு போர் முனைந்து முதுகுகொடுத்துத் தென்னாட்டை அடைந்திருந்தோரின் பழைய பெயரையே 'திரமிளர்' என்றும், அப்பால் 'திரவிடர், திராவிடர்' என்றும் படிப்படியாய் மாற்றிவைத்துக்கொண்டு, அன்னோர் தோற்று ஓடியதை அவர்களது பெயரோடு பொருத்தி, 'த்ரு' (துரத்து) எனும் அடியாய்ப் பிறந்ததே 'திராவிடம்' எனும்

சொல் என்றனர்போலும். இது பின்னெண்ணத்தால் எழுந்த சொற்பிறப்பே என்பது வெளிப்படை. ஸம்ஸ்கிருதத்திலே தமிழினின்றும் சென்றடைந்த வேறு பலசொற்களுக்கும் இவ்வாறே அம்மொழியாளர் பொருந்தாத சப்தோற்பத்திசெய்திருத்தல் பிரசித்தம் என்பதை எமது சொற்பிறப்பொப்பியலகாராதியில் ஆங்காங்குக் கண்டுகொள்க.

எவ்வாறாயினும், 'திரமிலர்' என்ற சொல்லில் இருந்து தமிழரின் பெயர்வந்தது' என்றதே பொருத்தமாகும். பொதுவாய் இடப்பெயர்களில்நின்று சனங்களின் பெயரும், சனங்கள் பெயரிலிருந்து பாஷைப்பெயரும் வந்திருக்கின்றமைக்குப் பல எடுத்துக் காட்டுகள் உள. நமக்கு அயலில் இருக்கின்ற மலையாளம், கன்னடம், தெலுங்கு, சிங்களம் எனும் பெயர்களிலும் இதைக் காணலாம். மலைசெறிந்தநாடு மலையாளம்; அந்நாட்டார் மலையாளிகள்; அவர்மொழி மலையாளம். கருமணல்கொண்டநாடு கன்னடதேசம்; அத்தேசத்தார் கன்னடர்; அவர்பாஷை கன்னடம். 'தெல்லு' என்பது வயற்பாத்தி; தெலுங்கம் அப்பாத்திகள் விரவியநாடு; அந்நாட்டவர் தெலுங்கர்; அவர் பேசும்மொழி தெலுங்கு. 'சிங்களம்' என்பது சிறீ ஈழம் எனும் தீவு ('ஈழம்' என்பது இலங்குவது இலங்கை அரங்கம், அதாவது தீவு). அத்தீவார் சிங்களர்; அவர் மொழி சிங்களம். இங்ஙனமே திரமிலர் கடலோடு சம்பந்தம் பூண்டவர்; அவர்மொழி 'திரமிலம்' அதாவது 'தமிழ்' என வருதலை உய்த்துணர்க.

இனி, தமிழரின் முன்னைய இருப்பிடக்கொள்கைகள், ஒத்த ஐதிகங்கள், பழக்கவழக்கங்கள், எழுத்து முறையும் மொழியொப்புமையும், தெய்வவழிபாடு, ஆதிநாகரிகம் ஆகிய துறைகள் எடுத்து ஆராயப்படும்.

---

# மதிப்புரை

சித்திரவாசகம்: திரு. ஜே. பி. மாணிக்கம் எம். ஏ., எல். டி. திரு. பே. நா. அப்புஸ்வாமி பி. ஏ., பி. எல். இவ்விருவரும் ஆசிரியராய் இயற்றிய இவ்வாசகக்கோவையின் முதன்மூன்றுபுத்தகங்கள் முன்னரே மதிப்புரைபெற்றன. எஞ்சிய நான்காம்புத்தகமுதல் எட்டாம் புத்தகம்வரை இப்பொழுது வெளியாகியுள்ளன. ஏனைய தமிழ்ப்பாடப்புத்தகங்களிலில்லாதனவாய், இவ்வாசகங்கட்கென ஆசிரியர்கள் வகுத்துக்கொண்ட சிறப்பியல்புகள் மிகப் பல. அவையனைத்தும் முதன் மூன்றுபுத்தகங்களிற்போலவே இவ்வெஞ்சிய புத்தகங்களிலும் போற்றிக் கையாளப்படுகின்றன.

இவற்றில் உள்ள சிறுகதைகள், பெரியார்சரிதங்கள், நீதிவாக்கியங்கள் பழமொழிகள், எளிய இனிய தமிழ்ப்பாடல்கள்: எல்லாம் இளஞ்சிறுவர்க்கு இன்பமூட்டவல்லன. பிராணிநூல், தாவரநூல், பௌதிகநூல்: இவற்றின் அரிய பொருள்கள் இப்புத்தகங்களில் தெளிய வுரைக்கப்பட்டுள்ளன. சிறுபிராயத்தில் பேரறிவுபுகட்டும் பாடப்புத்தகங்களில் இவை இணையின்றி விளங்குவனவாம். உபாத்தியாயர்குறிப்புக்கள், மாணவர் அப்பியாசங்கள், கேள்விகள், இலக்கணத்துணுக்குகள்: இவை இவற்றில் மலிந்து காணப்படுகின்றன.

சிறுவரேயன்றி வயதுமுதிர்ந்த பெரியவரும், தமிழ்நாட்டவரன்றிப் பிறநாட்டவரும் தமிழ்மொழிபயில்வதற்கு இவை தகுதி வாய்ந்தனவாகும். இங்ஙனம் உலகியலறிவை நன்குபுகட்டும் இப்புத்தகங்கள் தமிழ்மொழிக்கே ஓர் இன்றியமையாத குறையை நிரப்புகின்றன என்னலாம்.

மேல்நாட்டவரும் விரும்புமாறு மிக நவீனமுறைதழுவி அச்சிடப்பெற்ற இவை கிறிஸ்டியன் லிடரேச்சர் சோஸைட்டியாரின் வெளியீடாகவுள்ளன. நான்குமுதல் எட்டுவரையுள்ள இப்புத்தகங்களின்விலை முறையே அணு 6, 7, 7½, 8½, 10: வேண்டுவோர் சென்னை, பங்களூர், செக்கந்தராபாத், கொழும்பு. இவ்விடங்களில் ஷை சொஸைடியாரிடம் பெறலாம்.

முத்தமிழ் மஹாநாடு:—நிகழும் சித்திரபாநுவூ ஆடிமாதம் ௰௭, ௰௮, ௰௯-ஆம் நாட்களில் இம்மதுரைமாநகரில் நடைபெற்ற முத்தமிழ் மஹாநாட்டில், திறப்பாளர்கள் தலைவர்கள் வரவேற்புக் கழகத்தலைவர்கள் செயலாளர்கள் புலவர்கள்: ஆதியோர் நிகழ்த்திய விரிவுரைகள் முடிவுகள் முதலியவற்றைத் தொகுத்து முத்தமிழ் மஹாநாடு என்ற பெயருடன் நன்கு அச்சிடப்பெற்றுள்ள புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். அம்மஹாநாட்டைத் திறம்பட நடத்திய பெருமக்கள் நன்கொடையாளர் தலைவர் திறப்பாளர் புலவர் இசை வல்லார்: முதலியவர்களுடைய உருவப்படங்கள் ஆங்காங்குத் திகழ்ந்து அப்புத்தகத்தை அலங்கரிக்கின்றன. விரிவுரைகள் உணர்ச்சியும் ஊக்கமும் ஊட்டுவனவாய் உள்ளன. அம்மஹாநாட்டு நிகழ்ச்சிகளை அதிற் கலந்துகொள்ள இயலாதிருந்தவர்களும் நன்கு அறிந்துகொள்ளும்படி புத்தகவுருவிற் பதித்துத்தந்த அம்மஹா நாட்டுக் காரியக்குழுவினரது ஒப்புரவாண்மை பாராட்டத்தகும்.

---

பாரமேஸ்வரம்:—யாழ்ப்பாணத்துப் பேரறிஞரும் பெருஞ் செல்வரும் வள்ளியரும் ஆன திரு. பொன். இராமநாததுரையவர்களால் நிறுவப்பெற்ற பரமேசுவரக் கல்லூரியானது பல்லாற்றானும் மக்கட்கு நல்லறிவூட்டிவருதல் கற்றோர் அறிந்ததொன்று. இற்றைஞான்று அக்கல்லூரி பலதுறையினும் மேம்பட்டு விளங்குமாறு அதனை நன்கு புரந்துவருபவர், திரு. பொன். இராமநாததுரையவர்களுடைய அருமைத்தேவியரும் இலங்கைப் பல்கலைக்கழகத்தாரால் "தர்மகலாநிபுணம்" என்ற பட்டம் வழங்கிப் பாராட்டப் பெற்றவருமான ஸ்ரீமதி லீலாவதியம்மையாராவர். இப்பெருஞ் சிறப்பினரால் போற்றப்பெற்றுவரும் இக்கல்லூரியாசிரியரும் மாணவருமாகியோர் தொடர்பால் பாரமேஸ்வரம் என்ற பெயருடன் வெளிவரும் பத்திரிகையின் இரண்டாந்தொகுதியின் இரண்டாவது பகுதி வரப்பெற்றோம். இதனுள் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் வரையப்பட்ட அரிய கட்டுரைகளும் பிறவும் அடங்கியுள்ளன. அவை மாணவர்க்கு மதிநலனும் ஒழுக்கநலனும் சமயப்பற்றும் சரித ஆராய்ச்சியும் மிகுவிக்கத் தக்கன. இது வேண்டுவோர் யாழ்ப்பாணத்துப் பரமேசுவரக் கல்லூரித்தலைவரிடம் பெறலாம்.

---

1. கந்தசஷ்டிநினைவுமலர், 2. திருக்கார்த்திகைத்தீபமலர் :— இவை, பழனி ஸ்ரீ தண்டாயுதபாணிசுவாமிதேவஸ்தானத்து வேத சிவாகமபாடசாலைப் பேராசிரியர் திரு. ஈசானசிவாசாரியரவர்களால் எழுதப்பட்டு, அத்தேவஸ்தான நிருவாக அதிகாரியும் தமிழறிஞரு மான திரு. ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை B.A., B.L. அவர்களால் பழநி ஸ்ரீதண்டாயுதபாணிசுவாமிதேவஸ்தான வெளியீடாக அச் சிட்டுப் பிரசுரிக்கப்பெற்றவை. வேண்டுவோர் பழநி ஸ்ரீ தண்டாயுத பாணிதேவஸ்தான நிர்வாக அதிகாரியவர்களிடம் பெறலாம்.

இவற்றுள் கந்தசஷ்டிநினைவுமலர், முருகப்பெருமான்தோற்ற மும் அதன்காரணமும் உண்மையும் அவர் சூரன்முதலியோரை வென்றதும் தெய்வயானையம்மையையும் வள்ளியம்மையையும் மணந்துகொண்டவரலாறும் கந்தபுராணத்தின் சுருக்கமாயமைந்த வசனநடையில் யாவரும் படித்துணருமாறு தெளிவாய் எழுதப் பட்டது. சூரசங்காரதத்துவவிளக்கத்துடன் கூடியது. இடை யிடையே கந்தபுராணம் முதலியவற்றிலிருந்து எடுத்தாண்ட செய்யுளும் உரையும் திருப்புகழும் அமைந்தது. இதன்விலை தனிப் பிரதி அணா 1. 10 பிரதிகள் 8 அணா.

திருக்கார்த்திகைத்தீபமலர், கார்த்திகைமாதத்துக் கார்த்திகை நாளில் ஏற்றும் தீபச்சிறப்பும் அத்திருநாள் முருகப்பெருமா னுக்குச் சிறந்தநாளாயவாறும் கார்த்திகைவிரதத்தின் பெருமை யும் அதை அநுட்டிக்கும் முறையும் விளக்குவது. சிவாலய தெரிசனமுறையும் திருக்கோயிலிலே செய்யத்தகாதகுற்றங்களும் இவையென அறிவிக்கும் அநுபந்தங்களுடன் கூடியது. அன்பர் களுக்கு இனாமாகவழங்கப்படுவது.

---

# முன்னுரை

ஆற்றுப்படையென்ற நூல்வகையின் இலக்கணம் தொல்காப்பியத்தின்கண்ணேயே காணப்படுகின்றது.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்

என்பது புறத்திணையியற்சூத்திரம் (36).

அரசர்கள் முதலியோர் வாழ்ந்துவந்த நகர்கட்குச் சென்று அவர்களுடைய புகழைப் பாடி மகிழ்வித்துப் புலவர்கள் ஆதரவு பெற்றுவந்த பண்டைக்காலத்தே இவ்வகைப் பிரபந்தங்கள் தோன்றுதல் இயல்பே. ஏனெனின், ஆற்றுப்படைகள் அரசர் முதலியோர்மாட்டுச்சென்று பாடிச் செல்வம்பெறுதலையே நூற்பொருளாகக் கொண்டுள்ளன. சங்ககாலத்தே பல ஆற்றுப்படைகள் தோன்றின. கூத்தராற்றுப்படை என்பது மலைபடுகடாஅத்திற்கு வழங்கிய ஒருபெயர். பாணராற்றுப்படைவகையிற் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படையென இரண்டு நூல்கள் உள்ளன. பொருநராற்றுப்படையென்பதும் பத்துப்பாட்டினுள் ஒன்றென்பது யாவரும் அறிந்ததே. விறலியாற்றுப்படையென்பது தனிநூலாகக் காணப்படவில்லை. ஆனால் இவ்வகைப்பாட்டு, புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் வந்துள்ளது. 'சேயிழை பெறுகுவை' (புறம். 105), 'மெல்லியல்விறலி' (புறம். 133) என்ற செய்யுட்களை உதாரணமாகக்காட்டல் தகும். கூத்தர், பாணர், பொருநர் இவர்களைப்பற்றிய ஆற்றுப்படைச்செய்யுட்களும் புறநானூற்றிற் காணப்படுகின்றன.

இவையெல்லாம் உலகவாழ்வுகருதிய (லௌகிகச்) செய்யுட்களாம். பாட்டுடைத்தலைவனிடத்துப் பொருள்பெற்று மீளலும்,

மீளும்வழியிற் கூத்தர் முதலியோரைக் காணுதலும், அவர்களைத் தலைவனிடம் வழிப்படுத்திப் பரிசில்கொள்ளச்செய்தலும் பண்டைக் காலத்து உலகியற்செய்திகளே. இவ்வாறான லௌகிக நோக்கங் களின்பொருட்டே ஆற்றுப்படைகள் தோன்றியிருத்தல்வேண்டும். வேறுநோக்கங்கள் தொடக்கத்தில் இல்லை. தொல்காப்பியர் வேறு நோக்கங்கள் குறித்து இவ்வகைநூல்கள் பிறக்கக்கூடுமெனக் கருதி யவரேயல்லர். இஃது அவரது சூத்திரத்தால் தெளிவாயுள்ளது. ஆற்றுப்படைகள் பெருவழக்கிலிருந்த காலத்தின் இறுதியில் வேறு நோக்கம்பற்றியும் அவை தோன்றுதல் பொருத்தமாகும் என்ற உணர்ச்சி உண்டாயிருத்தல்வேண்டும். இரவலர்வாழ்வு எவ்வகை யான் நோக்கினும் இழிவானதே. அறநூற்பெரும்புலவராகிய வள்ளுவரும்,

‘ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்’ (குறள். 1066)

என்று கூறினர். (எள்ளி நகையாடுதற்குரிய) இச்சிறுபயன்பெறுதற் பொருட்டுத் தம்மையும் தமிழையும் இழிவுபடுத்திக்கொள்ளுதல் பெருமக்கள் வெறுக்கத்தக்கதாகவே இருக்கும். இதனை நக்கீரர் உணர்ந்து ஆற்றுப்படையின் நோக்கத்தையே முழுதும் வேறு கொண்டு அவ்வகைநூல்களுக்குப் புதியதொரு கௌரவத்தைக் கொடுத்தனரென்றுதான் நாம் கொள்ளவேண்டும். இங்ஙனம் இயற்றிய புதுநூல் முருகாற்றுப்படையாகும்.

இப்புதுநூலினைக் குறித்துப் பண்டைக்காலத்துத் தமிழறிஞர்க் குள்ளே விவாதம் நடைபெற்றது. இது நச்சினார்க்கினியரது புறத் திணையியலுரையால் நமக்கு விளங்குகிறது. ஒருசிலர் புலவராற்றுப் படையென்பதே நூற்பெயராதல்வேண்டும் என்றனர். நூலி னகத்தே (அடி 284) வழிப்படுக்கப்பட்டவன் “முதுவாயிரவலன்” ஆகிய புலவன் என்பது இவர் காட்டிய காரணமாதல்வேண்டும். சிறு பாணாற்றுப்படையிலும் (அடி 40), பதிற்றுப்பத்திலும் (66), புற நானூற்றிலும் (48, 180) ‘முதுவாயிரவல’ என வருதல் நோக்கத் தக்கது. 48-ம் புறப்பாட்டுப் ‘புலவராற்றுப்படை’ யெனவே துறை குறிக்கப்பட்டுள்ளது. நச்சினார்க்கினியர் இப்பெயர் வழங்கவில்லை

யென்றும், 'கூத்தர்முதலியோர்கூற்றாகச் செய்யுட்செய்யுங்கால் அவர்மேல் வைத்துரைப்பினன்றிப் புலனுடைமாந்தர் தாமே புல னெறிவழக்கஞ்செய்யா'ரென்றும் கூறி மறுக்கின்றார். முருகாற்றுப் படை யென்பதற்கு 'முருகன்பால் வீடுபெறுதற்குச்சமைந்தான் ஓரிரவலனை ஆற்றுப்படுத்ததென்பது' பொருளெனவும் அவர் கூறு வர். இப்பொருளைத்தான் நாமும் கொள்ளுதல்வேண்டும். ஆனால் பிற ஆற்றுப்படைகளெல்லாம் ஆற்றுப்படுக்கப்பட்டாராற் பெயர் பெறுதலும், அந்நெறிக்கு மாறாக முருகாற்றுப்படையொன்றே பாட்டுடைத்தலைவனாற் பெயர்பெறுதலும் மனங்கொளத்தக்கன. புலவராற்றுப்படை யென்ற பெயரால் நூல்நுதலிய சமயப்பொருள் விளங்கமாட்டாதுபோகவே, அப்பொருள் எளிதில் விளங்குமாறு பாட்டுடைத்தெய்வத்தின்பெயரொடுசார்த்தி இந்நூல் வழங்க லாயிற்றென்பதே உண்மையெனத் தோன்றுகிறது. இப்புதுவழக் குப் பரவிவிட்ட காரணத்தினால் பழைதாகிய புலவராற்றுப்படை யென்ற பெயர்வழக்கு வீழ்ந்ததாகல்வேண்டும்.

மேற்குறித்த விவாதமேயன்றித் தொல்காப்பியர்வகுத்த ஆற்றுப்படையிலக்கணத்தில் முருகாற்றுப்படை அடங்காதென வும் விவாதம் நிகழ்ந்திருத்தல்வேண்டும். நச்சினார்க்கினியர் தமது வழக்கப்படி சொற்களை அலைத்துப் பொருள்கொண்டு இந்நூலும் அடங்குமெனச் சாதித்துள்ளார். 'கூத்தரும் பாணரும் பொரு நரும் விறலியும், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்' எனவும், 'ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம்.................... சொன்ன பக்கமும்' எனவும், இரண்டாகப் பிரித்துக்கூட்டிப் பின்னதற்கு 'இல்லறத்தைவிட்டுத் துறவறமாகிய நெறியிடத்து நிற்றல் நன்றென்றும் கண்ட காட்சி தீதென்றும் மாறுபடத் தோன்றுகையினாலே, தான் இறைவனிடத்துப்பெற்ற கந்தழி யாகிய செல்வத்தை யாண்டுந் திரிந்தும் பெறாதார்க்கு இன்ன விடத்தே சென்றாற் பெறலாமென்று அறிவுறுத்தி, அவரும் ஆண்டுச்சென்று அக்கந்தழியினைப் பெறும்படி சொன்னபக்கமும்' என்று பொருளுரைத்தார். இது பொருளன்று என்பதனைச் சான்று காட்டி நிறுவவேண்டா. 'கூத்தர்முதலாயினோர் நெறியிடையே

காட்சி மாறுபடுமாறுதோன்றி......சொன்ன பக்கமும்' எனச் சேர்த்தே கொள்ளுதல்வேண்டும். இளம்பூரணர் இவ்வாறே கொண்டார். காட்சி மாறுபடுதலாவது பெருவளம் பெற்றுவரும் தமது காட்சியும் வறுமைப்பிணியால் வருந்தித் தள்ளாடிவரும் ஆற்றுப் படுக்கப்படுவார்காட்சியும் தம்முள் மாறுபடுதல். இதுவே செம்பொருள். எனவே முருகாற்றுப்படையைத் தொல்காப்பியச்சூத்திரம் கருதிற்றன்றெனலே தகுதி. இதனால் தொல்காப்பியருக்கு யாதோரிழுக்குமின்று.

இந்நூல் தோன்றியதனைக்குறித்து ஒரு வரலாறு வழங்குகிறது. திருப்பரங்குன்றத்திற் சரவணப்பொய்கையின் கரையில் ஓர் அரசமரம் நின்றது. அதிலுள்ள இலை நீரில்வீழ்ந்தால் மீனாகவும் நிலத்தில்வீழ்ந்தால் பறவையாகவும் மாறும். ஒருகால் ஓர் இலை பாதிகரையிலும்,பாதிநீரிலுமாக விழுந்தது. கரையில்விழுந்தபகுதி பறவையாகவும், நீரில்விழுந்தது மீனாகவும் அமைந்த விசித்திரப் பிராணியாக அவ்விலை மாறிற்று. பறவைப்பகுதி ஆகாயத்திற்பறக்கவும் மீன்பகுதி நீருள் மூழ்கவும் முயன்றன. அப்போது அங்குக் கரையிற் பூசைசெய்துகொண்டிருந்த நக்கீரர் ஏகாக்கிரசிந்தனையில் வழுவி இந்த அதிசயத்தைக்கண்ணுற்று இரண்டனையும் விடுவிக்க வந்தனர். சிவபூசையில் வழுவியகாரணத்தால் ஒரு பிரமராட்சசு நக்கீரரைப் பிடித்துக்கொண்டுபோய், ஒரு குகையில் அடைத்து விட்டது. அக்குகையில் இவரைப்போல் வழுவிய 999 பேர்கள் ஏற்கெனவே அடைபட்டிருந்தனர். இவரையும்சேர்த்து ஆயிரம்பேராகவே, அவ்வளவுபேரையும் உண்டுவிடவெண்ணி அப் பிரமராட்சசு நீராடிவருதற்குப்போயிற்று. அப்பொழுது நக்கீரர் முருகாற்றுப் படையைப் பாட, முருகப்பிரான் அவரைக் குகையினின்றும் விடுவித்தனர். இந்நூலை ஓதுவாருக்கு வேண்டும் வரங்கொடுப்பேமென்றும் முருகப்பிரான் அருள்செய்தனர்.

இவ்வரலாறு சில வேறுபாடுகளுடன் முதன்முதலாகத் திருவாலவாயுடையார்திருவிளையாடற் புராணத்தில் இந்திரன்முடிமேல் வளையெறிந்ததிருவிளையாடலிற் காணப்படுகிறது. (44,23-28) 'குன்றமெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்' என்றுவரும் வெண்பாவும் நக்கீரர் இயற்றியதாகவே இத்திருவிளையாடல்கூறும்.

ஆனல் ஒருவிஷயம் இங்கே கவனிக்கத்தக்கது. இவ்வரலாற்றுக்குரிய செய்யுட்கள் சில பிரதிகளில் இல்லை. எனவே இவைகள் பிற்காலத் தொருவராற் சேர்க்கப்பெற்றனவென்று கருதுதற்கு இடமுண்டு. இந்திரன்முடிமேல் வளையெறிந்த சரிதத்திற்கும், நக்கீரர் செயலுக்கும் யாதோர் இயைபுமில்லாமையும், இச்செய்யுட்களை நீக்கியவிடத்துக் கதை செவ்வனே நிகழுமாறும் ஈண்டு நோக்கத் தக்கன. அருணகிரிநாதர், 'கீரனுக்குகந்து.........உலகமுவப்ப வென்று னருளாலளிக்குகந்த பெரியோனே' (திருப்புகழ். சமாஜப் பதிப்பு. செய் 352) எனவும், 'மலைமுகஞ்சுமந்த புலவர்செஞ்சொல் கொண்டு வழிதிறந்தசெங்கை வடிவேலா' (திருப்புகழ். 1201) எனவும் கூறுதலிலே முருகாற்றுப்படையியற்றிய நக்கீரர்வரலாற்றைச் சிறிது காணலாம். திருப்புகழாசிரியர்காலம் 15-ஆம் நூற்றாண்டாகும். திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் 13-ஆம் நூற்றாண்டிற்குமுன்பு இயற்றியதாகலாம் என அந்நூலைப் பதிப்பித்த டாக்டர் உ. வே. சாமிநாதையர் கருதினர். இக்கால வரையறை கொள்ளத்தக்கதன்றெனவும் 16-ஆம் நூற்றாண்டுக்கே அந்நூல் உரியதெனவும் ஓர் ஆராய்ச்சியாளர் முடிவுசெய்துள்ளார். இவர் கூறுவனவே ஒப்புக்கொள்ளத்தக்கன. எவ்வாறு நோக்கினும் 13-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட இலக்கியங்களில் முருகாற்றுப்படைவரலாறு காணப்பெறவில்லை. எனவே, இவ்வரலாறு 13-ஆம் நூற்றாண்டுமுதல் கர்ணபரம்பரையாய் வழங்கத்தொடங்கியதெனக் கொள்ளலாம்.

இதுபோன்ற வரலாறுகளால் முருகாற்றுப்படை ஒரு சமய நூலாய்முடிந்து பெருமையிற் சிறந்துவிளங்கிற்று. நக்கீரரும் பொய்யடிமையில்லாதபுலவர்களுள் ஒருவராய்ப் போற்றப்பட்டனர். இவரது பொய்யற்ற புலமையை விளக்குதற்கும் ஒரு வரலாறு தோன்றியது.

> 'கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
> காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
> பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
> செறியெயிற் றரிவை கூந்தலின்
> நறியவு முளவோ நீயறியும் பூவே' (குறுந். 2)

என்ற குறுந்தொகைச்செய்யுள்பற்றியது இவ்வரலாறு. இச்செய்யுள் இறையனார் என்ற புலவர் இயற்றியது; "இயற்கைப்புணர்ச்சிக்கண் இடையீடுபட்டுநின்ற தலைமகன், தலைமகளை நாணின் நீக்குதற்பொருட்டு மெய்தொட்டுப்பயிறல்முதலாயின அவள் மாட்டு நிகழ்த்திக் கூடித் தனது அன்புதோற்ற நலம்பாராட்டியது" என்ற அகத்துறையிற் பாடிய பாட்டு. இதனைத் தருமியென்னும் பிரமசாரிக்கு ஆலவாயிற் சோமசுந்தரக்கடவுள் சிந்தாசமுத்தியாகப் பாடியளித்து, அவன் பொற்கிழி பெறும்படிசெய்தாரென்றும், இப்பாட்டிற்குக் குற்றங்கூறத்துணிந்த நக்கீரரைத் தண்டித்துப் பின் அருள்புரிந்தாரென்றும் ஒரு புதுவரலாறு புறப்பட்டுவிட்டது. நக்கீரர்தாமே எழுதியதெனப்படும் இறையனார் களவியலுரையில் இச்செய்யுளைக்குறித்துத் 'தலைமகளைப் புகழ்ந்து நயப்புணர்த்திற்றாயிற்றுப் போந்தபொருள்' (பவானந்தர்கழகம் 2-ஆம் பதிப்பு. பக். 49-50) எனக் காணப்படுகின்றது. இங்ஙனமிருப்பவும் இந் நக்கீரரையுளப்படுத்தி மேற்சுட்டிய வரலாறு எழுந்தது வியப்பேயாகும். இவ்வரலாற்றின்கண் நக்கீரர் சங்கறுக்கும் குலத்தினரென்று சொல்லப்படுகிறது.

இவ்வரலாறு கல்லாடமுதலிய ஒருசில நூல்களில் நக்கீரரையுளப்படுத்தாது வழங்கியுள்ளது. உதாரணமாக,

'பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக்
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
பொற்குவை தருமிக் கற்புட னுதவி'

எனக் கல்லாடத்தில் வந்துள்ளது (1, 10–12).

திருநாவுக்கரசுசுவாமிகளும்,

'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன்காண்.' (6, 76, 3)

என்று கூறியுள்ளார். இவ்வடிகள் தருமியின்பொருட்டு இறைவனே புலவனாகச் சங்கமேறிப் பாடியருளினனென்று பொருள்படுமாறு அமைந்துள்ளமை நோக்கத்தக்கது. நக்கீரர்செயலே கூறப்படவில்லை.

ஆகவே நக்கீரரை யுளப்படுத்தாத சரிதமொன்று நாவுக்கரசரதுகாலத்திற்குமுன்பு, கி. பி. 6-ஆம் நூற்றாண்டுதொடங்கி வழங்கியிருக்கவேண்டும். அவரை யுளப்படுத்திய சரிதம் சுமார் 13-ஆம் நூற்றாண்டளவில் வழங்கத்தொடங்கியிருக்கலாம். இப் பிற்காலச் சரிதத்தானும் நக்கீரர்புலமைத்திறனையும், அஞ்சாநெஞ்சுரனையும் தமிழ்மக்கள் போற்றினார்கள்.

நக்கீரர் சாபானுக்கிரக சக்தியுடையரெனவும் நம்மவர்கள் கருதினார்கள். இக்கருத்திற்கியையக் கடைச்சங்கத்தைப்பற்றிய ஒரு வரலாறும் எழுந்தது. இக்காலத்திற்போலவே கடைச்சங்க காலத்தினும் தென்மொழி வடமொழிப் போரொன்று நிகழ்ந்தது. இப்போர் முடிவுபெறும்வரையிற் சங்கத்தாராகிய பட்டிமண்டபத்தார் அம்மண்டபத்தின் தெற்குவாயிலைத் திறவாது அடைத்துவிட்டனர். அவருள் தலைவராக நக்கீரனார் நின்று வாதத்தை நிகழ்த்திவந்தனர். எதிர்க்கட்சியில் ஒருவன் 'ஆரியம் நன்று தமிழ் தீது' என்று கூறினான். இஃது உலகம் பொறுக்கமாட்டாத சொல்லாதலால் உடனே மரணமாய் வீழ்ந்தனன். இறந்தவனை எழுப்பினால் உமது தமிழ்க்கட்சியை ஒப்புவோம் என்று எதிர்க்கட்சியினர் கூற,

'ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியி லகத்தியனா ராணையாற்
செந்தமிழே தீர்க்க சுவாகா'

என்ற மந்திரச்செய்யுளைச் சொல்லி உயிர்ப்பித்தனர். இதனிடையில் வடமொழிக்கட்சியிலுள்ள வேட்கோவனான குயக்கோடன் தமிழ்க்கட்சியினரைக்குறித்து ஆனந்தச்செய்யுள் கூறிக்கொண்டிருந்தான். அவனைநோக்கி, நக்கீரர்,

'முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—அரணியல்
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோடன்
ஆனந்தஞ் சேர்க சுவாகா'

என்ற மந்திரச்செய்யுளைச்சொல்லி இறந்துபடச்செய்தனர். இவ்வரலாற்றை 'இவை தெற்கண்வாயில்திறவாத பட்டிமண்டபத்தார்

பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவும் [ஒருவன்] சாவவும் பாடிய மந்திரம் அங்கதப்பாட்டாயின' எனப் பேராசிரியர் செய்யுளிய லுரையில் (சூ. 178) கூறுவதிலிருந்து ஊகிக்கலாம். இதனைச் சிறிது வேறுபடுத்தித் தமிழ்நாவலர்சரிதை உரைக்கின்றது. அதில் 'நக்கீரர் நாடத்துக் குயக்கொண்டானைச் சாகப்பாடிய அங்கத வெண்பா'எனத் தலைப்புத் தரப்பட்டுள்ளது. இது நுணுகிநோக்கத் தக்கது. 'நாடத்து' என்பது பொருள்படுமாறில்லை; அது 'நாட கத்து' என்று இருத்தல்வேண்டும்போலும். இவ்வூகம் உண்மை யொடுபட்டதாயின் 'நக்கீரர்நாடகம்' என்ற நூலொன்று வழங்கிய தென்றும், அதன்கண் இவ்வரலாறு கூறப்பட்டிருந்ததென்றும் நாம் கொள்ளலாம்.

'நக்கீரர்நாடகம்' போன்றதொருநூல் முற்காலத்தில் வழங்கி வந்ததென்பதற்கு வேறொருசான்றும் உள்ளது. யாப்பருங்கல விருத்தியுரையில் (பக்-133)

'ஊசி யறுகை யுறுமுத்தங் கோப்பனபோல்
மாசி யுகுபனிநீர் வந்துறைப்ப—மூசு
மூலைக்கோடு புல்லுதற்கொன் றில்லாதேன் காண்மோ
விறக்கோடு கொண்டெரிக்கின் றேன்'

'இந்நக்கீரர்வாக்கினுள் கடையிரண்டடியும் மூன்றாமெழுத்தொன் றெதுகை வந்தவாறு காண்க' எனக் காணப்படுகிறது. இச்செய் யுள் நக்கீரர் நாடகபாத்திரமாகவேனும் கதாபாத்திரமாகவேனும் வந்துள்ள ஒருநூலிற் குரியதாதல்வேண்டும். 'தமிழறியும்பெரு மாள்கதை' என்று இக்காலத்துவழங்கும் நூலில் மேலைச்செய்யுள் சிறிது வேறுபாட்டுடன் நக்கீரர்கூறியதாக அமைந்துள்ளது. இதுவும் எனது ஊகத்தை வலியுறுத்துகிறது. யாப்பருங்கல விருத்தியில் இச்செய்யுள் பயின்றுவருதலினாலே தமிழறியும்பெரு மாள்கதையைப்போன்றதொரு கதை சுமார் கி. பி. 10-ஆம் நூற் றாண்டளவில் வழங்கிவந்ததெனக் கொள்ளலாம்.

இவ்வரலாறுகளெல்லாம் வெவ்வேறுகாலங்களில் வெவ்வேறு நோக்கங்களுடன் தோன்றி நக்கீரரது பெருமையையும் புகழையும் வளர்ப்பனவாயின. இவற்றுள் ஒன்றேனும் அவரது உண்மைச் சரிதத்தோடு தொடர்புடையதெனக் கொள்ளுதற்கில்லை.

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | தனுநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 3. | *வளையாபதிச்செய்யுட்கள் ... ... ... | | | |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | *நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | | | |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) .. | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 11. | *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் ... ... | | | |
| 12. | *பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | *திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23. | *விக்கிரமசோழனுலா ... ... ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை... ... ... | 0 | 8 | 0 |
| 28. | *சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | *சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மனீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | *அகப்பொருள்விளக்கம் ... ... ... | | | |
| 35. | *திருமந்திர நூறுபாட்டுக்குரை ... ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | *பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்) | | | |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 43. | மேகவிடுதூது | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் | 0 | 6 | 0 |
| 49. | *கடைவள்ளலார்காலம் | | | |
| 50. | *தமிழரும் ஆந்திரரும் | | | |
| 51. | *மதங்கசூளாமணி | | | |
| 52. | கூடற்புராணம் | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (தமிழ்) | 0 | 6 | 0 |
| | ஷை (ஆங்கிலம்) | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் | 0 | 2 | 0 |
| 66. | சந்திரகுப்தன் | 0 | 6 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜநி | 0 | 2 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 38 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.